# செல்வன்
# செந்தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

ஆசிரியர்:
G. மைக்கேல் பிள்ளை, M.A.

பதிப்பாசிரியர்:
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

600 008.

ஜெகசெல்வன் கம்பெனி
நாகர்கோவில்

பதிப்புரிமை]

[விலை ரூ. 0-9-0

முதற் பதிப்பு—அக்டோபர், 1952
இரண்டாம் பதிப்பு—1953
மூன்ரும் பதிப்பு—1956

147170

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette, dated 19-5-1954, Page 24]

TB
031(4)
N56

Kabeer Printing Works, Madras (3152)

# முன்னுரை

'செல்வன் செந்தமிழ் வாசகம்' என்னும் மகுடம் புனைந்த இவ்வாசக வரிசை, சென்னைக் கல்வியிலாக்கா அதிகாரிகள் வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தை முற்றுந் தழுவி இயற்றப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலையிற் பயிலும் மாணவ மாணவிகள், ஐந்தாம் வகுப்பை முடிப்பதற்குள், தங்கள் தாய்மொழியிற் பிழையறப் பேசவும் எழுதவும், எடுத்த நூலைப் படித்துப் பொருள் உணரவும் வல்ல மொழிப் பயிற்சியைப் பெறுவதுடன், கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டு மேன்மேலும் கற்கவும் வழி வகுப்பது இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

இக்கருத்தை உட்கொண்டே இவ்வாசக வரிசை இயற்றப்பட்டுள்ளது என்பது, ஆரம்பப் பாடசாலையிற் கல்வி கற்பிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இவ் வரிசையைக் கவனிப்பின் எளிதிற் புலனாகும். சிறுவர் சிறுமியர்க்கு மொழிப் பயிற்சியில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுதற்கான வகையில் இனியதும் எளியதும் விரும்பிக் கற்கத்தக்கதுமான முறையில் மொழியமைப்பும் பொருளமைப்பும் அமைந்துள்ளன.

தமிழ் மொழி பயில்வார் அம்மொழித் திறம் அறிந்து பயில்வதற்கு ஓரளவு இலக்கணப் பயிற்சி இன்றியமையாதது. ஆதலின், இவ்வாசக வரிசையில் வகுப்புக்கேற்ற வகையில் எளிய முறையில் இலக்கணப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் அப்பாடத்திற் பயின்று வந்துள்ள அருஞ்சொற்களும், அப்பாடத்தை மாணவர் நன்கு நினைவு கூர்தற்குரிய வகையிற் கேள்விகளும், சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு, சொற்பொருள் உணர்வு முதலியவற்றுக்கான பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இவ்வாசக வரிசையைப் பயன்படுத்துவதால், கல்வியிலாக்கா அதிகாரிகள் கருத்தூன்றி வகுத்துள்ள பாடத்திட்டம் ஆரம்பப் பள்ளியிற் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மிகுந்த நலம் பயக்குமெனக் கூறலாம். ஆதலின், ஆரம்பக் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர் பெருமக்கள் இவ்வாசக வரிசையை ஆதரித்து என்னை ஊக்கியருள்வார்கள் எனும் நம்பிக்கை எனக்குண்டு.

ஆசிரியன்

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. உண்மை வெளியாதல் | ... | 1 |
| 2. படம் பார்த்துக் கதை எழுதுதல் | ... | 6 |
| 3. நமது மொழி | ... | 8 |
| 4. உடற்பயிற்சி | ... | 13 |
| 5. ஒற்றுமை | ... | 17 |
| 6. மூடக் காக்கை | ... | 22 |
| 7. கடிதம் எழுதுதல் | ... | 25 |
| 8. கடிதத்தின் பிரயாணம் | ... | 30 |
| 9. கயிறு திரித்தல் | ... | 34 |
| 10. உல்லாசப் பிரயாணம் | ... | 38 |
| 11. பெருந்தன்மை | ... | 46 |
| 12. வெள்ளப் பெருக்கால் நேர்ந்த சேதம் | ... | 50 |
| 13. ஔவையார் | ... | 55 |
| 14. திருவிழாப் பார்க்கச் செல்லுதல் | ... | 61 |
| 15. இராணி மங்கம்மாள் | ... | 66 |
| 16. சர்க்கரை | ... | 70 |
| 17. பருத்தி | ... | 74 |
| 18. காந்தியடிகள் | ... | 80 |
| செய்யுட்பகுதி | | |
| 1. நாட்டுச் சேவை | ... | 85 |
| 2. முதலியார் வாங்கிய காளை | ... | 87 |
| 3. மூதுரை | ... | 88 |

# செல்வன்
# செந்தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்



## 1. உண்மை வெளியாதல்

[கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களைக்கொண்டு கதையை எழுது. வேண்டும் இடங்களில் வாக்கியங்களின் பின் முற்றுப் புள்ளியும், கேள்விக் குறியும் இடு.]

மங்களபுரியில் வேலன் என்னும் குடியானவன் உண்மையுள்ளவன்—உழைப்பாளி—

காய்கறிகள் விற்கச் சந்தைக்குச் செல்லல்—திரும்புதல்—வழியில் பணப்பையைக் கண்டு எடுத்தல்—வீட்டுக்குச் செல்லுதல்.

பக்கத்துத் தெரு ஆழ்வார் செட்டியார்—மளிகை வியாபாரி—ஆயிரம் ரூபாயுள்ள பணப்பை காணுமற்போதல்—கண்டெடுத்தவருக்கு நூறு ரூபாய் இனும் என அறிவித்தல்.

வேலன் செட்டியார் வீட்டுக்குச் செல்லுதல்—பணப்பையைக் கொடுத்தல்—செட்டியார் பணத்தை எண்ணுதல்—நூறுரூபாய் கொடுக்காமல் ஏமாற்ற நினைத்தல்—'மோதிரம் எங்கே? நீதிபதியிடம் வா,' என்று சொல்லுதல்—இருவரும் நீதி மன்றம் அடைதல்.

நீதிபதி வழக்கை விசாரித்தல்—குடியானவன் சொல்வது உண்மையென அறிதல்—செட்டியாரின் உலோபத்தன்மையை உணர்தல்—'செட்டியாரே, இது உமது பணப்பை அன்று; மோதிரம் உள்ளதுதான் உமது பை,' என்றல்—செட்டியார் வெட்கமடைதல்—நீதிபதி பணப்பையைக் குடியானவனுக்குக் கொடுத்தல்—அவன் சந்தோஷமாக வீடு செல்லுதல்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| குடியானவன் | மளிகை | நீதிபதி |
| உழைப்பாளி | வியாபாரி | வழக்கு |
| சந்தை | இனும் | உலோபத்தன்மை |
| உண்மையுள்ளவன் | ஆயிரம் ரூபாய் | நீதி மன்றம் |
| பணப்பை | ஏமாற்ற | மோதிரம் |

### கேள்விகள் :

1. வேலன் வழியில் கண்டெடுத்தது என்ன ?
2. அவன் அதை யாரிடம் கொண்டுபோய் கொடுத்தான் ?
3. அவர் அவனை எவ்வாறு ஏமாற்ற நினைத்தார் ?
4. அவ்விருவரும் எங்கே சென்றனர் ?
5. ஆழ்வார் செட்டியார் பொய் சொன்னார் என்பதை நீதிபதி எப்படி அறிந்தார் ?
6. அவர் என்ன தீர்ப்புச் சொன்னார் ?
7. இக்கதையிலிருந்து நீ என்ன அறிந்துகொள்ளுகிறாய் ?

### பயிற்சி :

மூவர் குடியானவனாகவும், செட்டியாராகவும் நீதிபதியாகவும் நடிக்க.









## 2. படம் பார்த்துக் கதை எழுதுதல்

[இந்த நான்கு படங்களும் ஒரு கதையை விளக்குகின்றன. கீழே எழுதப்பட்டுள்ளவற்றை மௌனமாக வாசித்துப் படங்களைப் பார்த்துக் கதையைத் தொடர்ச்சியாக எழுதுக.]

1. ஒரு காட்டில் ஒரு சிற்ருறு ஓடிக்கொண்டிருந்தது. அதில் தண்ணீர் அதிகமாய் இருந்தது. அதனுல், அதைக் கடக்கக் குறுக்கே ஒரு சிறிய மூங்கிற்பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அப்பாலத்தில் ஒரு சமயத்தில் ஒருவர் மட்டுந்தான் செல்ல முடியும்.

2. ஒரு நாள் ஆற்றின் இக்கரையிலுள்ள ஒரு செம்மறியாடு அக்கரைக்குச் செல்ல விரும்பியது. அது பாலத்தின்மீது ஏறிப் பாதித் தூரம் வந்தது. அதே சமயத்தில் அக்கரையிலிருந்து மற்ருெரு செம்மறியாடு பாலத்தின் மீது வந்துகொண்டிருந்தது. இரண்டும் பாலத்தின் நடுவில் சந்தித்தன. ஒன்றையொன்று கடந்து செல்ல இடமில்லை. சிறிது நேரம் அவை ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு நின்றன. பின்பு ஒன்று பாலத்தின்மீது படுத்துக்கொண்டது. நின்ற ஆடு அதன்மீது மெதுவாகத் தன் காலை வைத்து ஏறி, அதனைக் கடந்து சென்றது.

### கேள்விகள் :

1. ஆற்றின் குறுக்கே பாலம் எதற்காகப் போடப்பட்டிருந்தது ?

2. முதலிற் சந்தித்த ஆடுகள் பாலத்தை எவ்வாறு கடந்து சென்றன ?

3. பின்பு சந்தித்த ஆடுகள் என்ன செய்தன ?

4. அதனுல் என்ன நேர்ந்தது ?

5. இந்தப் பாடத்திற்குப் பொருத்தமான தலைப்புக் கொடு.

### பயிற்சி :

1. கீழ் வரும் சொற்களைச் சேர்த்தெழுது :—

சிறு + ஆறு — சிற்ருறு
சிறு + அன்னை —
சிறு + அப்பன் —
சிறு + ஆள் —

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்ருெடர்களைப் பிரித்துக் காட்டு :—

தண்ணீர் — தண் + நீர்
உண்ணீர் —
மண்ணீர் —
கண்ணீர் —




## 3. நமது நாடு

1. நாம் பேசுவது தமிழ் மொழி. குழந்தைப் பருவமுதல் நாம் இதனைப் பேசுகின்றோம். ஆதலால், இது நமது தாய் மொழியாகும். இது மிகவும் பழமையானது. இது எந்தக் காலத்தில் உண்டாயிற்று என்பதை நாம் அறிதல் இயலாது.

2. ஆதியில் மனிதர் தம் உணர்ச்சியைக் குரலால் வெளிப்படுத்தினர். குழந்தைகள் தங்கள் உணர்ச்சியைப் பல ஒலியால் தெரி-

விக்கின்றன அல்லவா? உணர்ச்சியைக் குரலாலும் சைகைகளாலும் தெரிவிக்கலாம்; ஆனால், சொற்களால் தெரிவிப்பதே சிறப்பாகும்.

3. நாள் ஆக ஆக, மனிதர் அவசியமான சொற்களை அமைத்துக்கொண்டனர். சொற்கள் பெருகின. முதலில் அச்சொற்களின் உதவியால் அவர்கள் சமீபத்திலுள்ளவர்களிடம் பேசி, தங்கள் மனத்தின் எண்ணத்தைத் தெரிவித்து வந்தார்கள்; தூரத்திலுள்ள வர்களுக்குச் செய்தி தெரிவிக்க ஒரு வழி கண்டு பிடித்தார்கள். ஒவ்வோர் ஒலிக்கும் ஒவ்வோர் அடையாளத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த அடையாளம் **எழுத்து** எனப்பட்டது. எழுத்துக்கள் பெருகவே, மொழி வளர்ந்தது.

4. நமது மொழியில் பல வகை எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவை உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும், அவை இரண்டும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களும் ஆகும். ஆய்தவெழுத்து என்ற மூன்று புள்ளி வடிவான எழுத்தும் வழங்குகின்றது. மற்ற மொழிகளில் இல்லாத ழ, ற, ன என்னும் ஒலிகள் தமிழில் இருக்கின்றன. இது தமிழ் மொழிக்குரிய தனிச் சிறப்பாகும்.

5. நமது மொழி ஒரு காலத்தில் வடக்கே **இமயமலை** வரையும் பரவியிருந்தது; இப்பொழுது தென்னிந்தியாவின் தென்பாகத்தில்தான் பேசப்பட்டு வருகின்றது. **தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு** முதலிய மொழிகள் நம் தமிழ் மொழியிலிருந்து பிரிந்து வழங்கும் மொழிகளேயாகும்.

6. பல நூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டிய அரசர்கள் தமிழ்ப் புலவர்களைச் சேர்த்துத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தினுர்கள். அவர்களால் தமிழ் மொழி வளர்க்கப்பட்டுச் செம்மையுற்றது. அதனுல், தமிழ் 'செந்தமிழ்' என வழங்கப்பட்டது; பாண்டி நாடும் **செந்தமிழ் நாடு** என வழங்கப்பட்டது. '**தமிழ்**' என்பதற்கு '**இனிமை**' என்பது பொருளாகும்.

7. தமிழில் நூல்கள் மிகுதியாய் உள்ளன. அவற்றுள் **சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், மணிமேகலை** என்பவை மிகச் சிறந்தவை. **திருக்குறள்** என்னும் நீதி நூல், உலக மக்கள் பலராலும் போற்றப்படுகின்றது.

8. ஐரோப்பியர்களும் நமது மொழியைக் கற்று, அதனைப் புகழ்ந்தார்கள். அவர்களுள் **போப்பையர்** என்பவர், "தமிழ் மொழி

பழமையுடையது; நலம் வாய்ந்தது; உயர்நிலையிலுள்ளது; இதைப்போன்ற திராவிடமொழி வேறெதுவும் இல்லை,'' என்று கூறியிருக்கின்றூர். நாமும் நமது மொழியைக் கற்று அதனைப் போற்ற வேண்டும்.

## சொற்கள் :

| | | |
|---|---|---|
| தாய்மொழி | உணர்ச்சி | சைகை |
| தனிச்சிறப்பு | அடையாளம் | மூன்று புள்ளி |
| தெலுங்கு | மலையாளம் | கன்னடம் |
| தமிழ்ச்சங்கம் | துளு | தென்னிந்தியா |
| சீவகசிந்தாமணி | சிலப்பதிகாரம் | மணிமேகலை |
| ஐரோப்பியர் | கம்பராமாயணம் | திருக்குறள் |
| திராவிடமொழி | போப்பையர் | உயர்நிலை |

## கேள்விகள் :

1. 'தாய் மொழி' என்பது யாது?
2. நமது தாய் மொழி எது?
3. நமது தாய் மொழி எப்படிப்பட்டது?
4. மொழிகள் எப்படி உண்டாகின்றன?
5. மனிதர் தம் எண்ணத்தை முதலில் எப்படித் தெரிவித்தனர்?
6. நமது மொழியிலுள்ள எழுத்துக்கள் எவை?
7. முற்காலத்தில் நமது மொழி எங்கே பேசப்பட்டு வந்தது?
8. நமது மொழியிலிருந்து பிரிந்த மொழிகள் எவை?
9. தமிழில் உள்ள சிறந்த நூல்கள் எவை?

10. உலக மக்கள் போற்றும் தமிழ் நூல் எது ?
11. போப்பையர் தமிழைப்பற்றிக் கூறியது என்ன?

## பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—

   சமீபம் பெருக பிரிந்து புகழ்ந்தனர்.

2. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

   (1) ஆதியில் மனிதர் தம் —— ஒருவிதக்——வெளிப் படுத்தினர்.

   (2) உணர்ச்சியைக் —— ——. தெரிவிக்கின்றன.

   (3) ஒவ்வோர் ஒலிக்கு ஒவ்வோர் — ஏற்படுத்தினர்.

   (4) மற்ற மொழிகளில் இல்லாத —— என்னும் —— தமிழில் ——.

3. பிரித்தெழுது :—

   சிலப்பதிகாரம் — சிலம்பு + அதிகாரம்
   இருப்புப்பாதை —
   கருப்புக் கட்டி —

4. ஆ — ஓர் ஒலியைக் குறிக்கும் அடையாளம்.
   இது ஓர் எழுத்து.
   இது 'பசு' என்று பொருள்படும்போது ஒரு சொல்.

   ஆல் — இரண்டு ஒலிகளால் அல்லது எழுத்துக் களாலாகிய சொல்.

   ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்துக்களாலாகிய சொற்கள் நான்கு எழுது.



## 4. உடற்பயிற்சி

1. நமது தேகம் பலத்தையும், சுகத்தையும் அடைவதற்கு அவசியமான செயல்களில் பயிற்சி பெறுதலே உடற்பயிற்சி ஆகும். தேகம் நல்ல நிலைமையிலிருந்தால், மனமும் நல்ல நிலைமையிலிருக்கும். அப்போதுதான் அறிவு வளரும்; மந்த புத்தி நீங்கும்; சுறுசுறுப்பு உண்டாகும்; சோம்பல் நீங்கும்.

2. முற்காலத்தில் நம்மவர் உடற்பயிற்சியில் கவனம் செலுத்தி வந்தனர். கிராமங்களில் சிலம்பக் கூடங்கள் இருந்தன. சிலம்ப வித்தை கற்பிக்கும் உபாத்தியாயர்கள் இருந்-

தார்கள். **மல் யுத்தம்** என்ற மற்போரிலும் மக்கள் பயிற்சி பெற்றுர்கள். சிலர் கூட்ட-மாய்ச் சேர்ந்து ஓர் ஆசிரியரிடம் கற்று வந்-தனர். மற்போரில் தேர்ச்சி பெற்றவன், இரண்டு பேருடன் சண்டை செய்து அவர்களை எளிதில் வென்றுவிடுவான். சிலம்ப வித்தை அறிந்தவன், பத்துப் பதினைந்து பேரையும் அடித்து வீழ்த்திவிடுவான்.

3. கிராம மக்கள் உடற்பயிற்சிக்காகப் பற்பல விளையாட்டுக்களை விளையாடி வந்தார்-கள்; குட்டிப் பந்தாட்டம், கிளித் தட்டு, சடு-குடு முதலிய ஆட்டங்களை விருப்பத்துடன் ஆடினுர்கள். இப்படிப்பட்ட விளையாட்டுக்-களுக்குக் கருவிகள் பல வேண்டுவதில்லை. மேனுட்டு விளையாட்டுக்களில் ஒவ்வொன்றுக்-கும் ஒவ்வொரு கருவி வேண்டும். கிராம மக்-கள் ஆடிய விளையாட்டுக்களுக்கு அதிகமான ஆட்கள் வேண்டா. பக்கத்துக்கு நான்கு பேர் இருந்தாலும் விளையாடலாம். விளை-யாட்டுக்களினுல் விளையாடுபவர்களுக்குத் தீங்கு நேர்வதில்லை. தேகபலமும், நுண்ணறி-வும், ஆடும் தந்திரமும் வேண்டும். விளையாட்-டால் உடலிலுள்ள எல்லா உறுப்புக்களுக்கும் பயிற்சி ஏற்படும். உடற்பயிற்சிக்காக இப்-படிப்பட்ட விளையாட்டுக்களை விளையாடலாம்.

4. இளமையிலேயே உடற்பயிற்சியைச் செய்து வரவேண்டும். காலையில் எழ வேண்டும். திறந்த வெளியில் கசரத்து முதலிய பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அதனால், தேகத்திலுள்ள அசுத்த நீர் வெளிப்படும். வியர்வை வெளிவருவதனால், இரத்தம் சுத்தமடைகின்றது; தோலிலுள்ள அசுத்தம் நீங்குகின்றது; இரைப்பை முதலிய உறுப்புக்கள் நன்றாகவே வேலை செய்கின்றன; வியாதிகள் நீங்குகின்றன. அதனால், சுத்தமாக வாழலாம்; தேகபலமும் ஏற்படும்; எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கலாம்.

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| பயிற்சி | சுறுசுறுப்பு | சோம்பல் |
| பெறுதல் | சிலம்பக் கூடம் | மற்போர் |
| கவனம் | வருத்தம் | உற்சாகம் |
| வீழ்த்தி | கிளித்தட்டு | சடுகுடு |
| குட்டிப் பந்து | கருவிகள் | தந்திரம் |
| உறுப்பு | எழ வேண்டும் | திறந்த வெளி |
| கசரத்து | அசுத்தம் | வியர்வை |
| இரைப்பை | தேகபலம் | சுகம் |

**கேள்விகள் :**

1. 'உடற்பயிற்சி' என்பது என்ன ?

2. உடற்பயிற்சி செய்வதனால் ஏற்படும் நன்மைகள் என்ன ?

3. முற்காலத்தில் நம்மவர்கள் உடற்பயிற்சிக்காக என்ன செய்து வந்தார்கள் ?

4. கிராமங்களில் விளையாடும் விளையாட்டுக்கள் எவை ?

5. கிராம விளையாட்டுக்கும் மேனுட்டு விளையாட்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன ?

6. கசரத்து முதலிய பயிற்சிகள் செய்வதனுல் நாம் எவ்வாறு வாழலாம் ?

### பயிற்சி :

1. கூட்டமாக, சுறுசுறுப்பு, அவசியமான, சந்தோஷமாக—இவற்றை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.
2. அசுத்த நீர், இசையுடன், தீங்கு—இதே அர்த்தமுள்ள வேறு சொற்கள் எழுது.
3. கீழே கோடிட்ட இடத்தை நிரப்பு :—

   ஆடு —— ஆட்டம் வாடு —— ——
   தேடு —— —— ஓடு —— ——
   நாடு —— ——

4. ஆடு, தேடு, நாடு வாடு, ஓடு — இவை என்ன சொற்கள் ?
5. 'ஆட்டம்'-இது என்ன சொல்? இது பெயர்ச்சொல்; 'ஆடு' என்ற வினைச்சொல்லிலிருந்து உண்டானபெயர்ச்சொல்—ஆதலால், வினைப்பெயர் அல்லது தொழிற்பெயர் எனப்படும். ஒரு வினையின் அல்லது தொழிலின் பெயராக வருவது தொழிற்பெயர்.

கீழ் வரும் வினைச்சொற்களைத் தொழிற்பெயர்கள் ஆக்கு :—

   எழுது —— எழுதுதல் வா ——
   அழை —— தா ——
   போ ——



## 5. ஒற்றுமை

1. நாம் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும். ஒருவரோடு ஒருவர் சண்டையிடக் கூடாது. நாம் ஒன்று சேர்ந்து வாழ்ந்தால், பல நன்மைகளை அடையலாம்; துன்பம் வந்தாலும், அதனை எளிதில் நீக்கலாம்.

2. ஒரு காட்டில் ஒரு வேடன் இருந்தான். அவன் அக்காட்டிலுள்ள விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி, அவற்றின் இறைச்சியைப் புசித்து வந்தான்; ஒரு நாள் வேட்டையாடச் சென்று, ஒன்றும் கிடைக்காமல் திரும்பினான்; வழியில் ஒரு மரத்தின்மீது புருக்கள் கூட்டமாயிருப்பதைக் கண்-

டான்; உடனே, தான் வைத்திருந்த வலையை மரத்தினடியில் விரித்து, சிறிது தானியத்தைத் தெளித்துவிட்டு, ஒரு செடியின் பின் மறைந்துகொண்டான்.

3. புருக்கள் அத்தானியத்தைப் பார்த்தன. அவை அத்தானியத்தைத் தின்ன ஆவல் கொண்டன. ஆனால், சித்திரக் கிரீவன் என்னும் புரு அரசு, "இக்காட்டில் தானியம் எப்படி வந்தது? இதில் ஏதோ சூது இருக்கின்றது!" என்று கூறினது. அதைக் கேட்ட இளம் புரு ஒன்று, "இப்படி ஆலோசித்தால், நமக்கு இரை அகப்படாது; நாம் அஞ்சாமல் போய்த் தின்போம்," என்றது. இவ்வார்த்தைகளைச் செவியுற்ற மற்றப் புருக்கள் தைரியமடைந்தன. அவை, தானியத்தைத் தின்னும்பொருட்டு நிலத்தில் இறங்கி, வலையில் அகப்பட்டுக்கொண்டன. அதைக் கண்ட புரு அரசு, "நீங்கள் என் சொல்லைக் கேளாமையால், இத்துன்பம் அடைந்தீர்கள். நான் மாத்திரம் தனியே இருந்து என்ன பயன் என்று சொல்லி, தானும் கீழே இறங்கி வலையில் அகப்பட்டுக்கொண்டது.

4. புருக்கள் வலையில் சிக்கிக்கொண்டதும், வேடன் மறைவிலிருந்து வெளியே வந்தான். புருக்கள் அவனைக் கண்டு நடுங்-

கின ; இளம்புருவைப் பார்த்து, "உன் சொல்லைக் கேட்டதால், இத்துன்பம் நேர்ந்-ததே!" என்று புலம்பின. புரு அரசு அவைகளைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது அழுது பயனில்லை. நாம் எல்லோரும் சேர்ந்து பறந்து இவ்வலையுடன் வேற்றிடஞ் செல்ல வேண்டும்," என்றது. உடனே, புருக்கள் எல்லாம் வலையோடு வேற்றிடம் பறந்து சென்றன.

5. வேடன் ஆச்சரியப்பட்டு, "இவை ஒரே மனமாய் வலையுடன் பறந்து செல்கின்-றன. ஆயினும், இவைகளுக்குள் சண்டை ஏற்படும். அப்போது, என் கையில் அகப்-படும்," என்று சொல்லிக்கொண்டு, அவற்-றின் பின் ஓடினன். புருக்களோ, அவன் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்-விட்டன. அவன் வருத்தத்துடன் வீடு திரும்பினன்.

6. புரு அரசுக்குச் சிநேகமான இரணி-**யகன்** என்னும் எலி அரசின் வளை அருகில் புருக்கள் இறங்கின. எலி அரசு வெளியே வந்து, புரு அரசு வலையில் அகப்பட்டிருப்-பதைக் கண்டது ; அதன் வலைக் கயிற்றைத் தன் கூரிய பற்களால் அறுக்கத் தொடங்கியது. புரு அரசு, "நண்பா, முதலில் என் நண்பர்-

களை விடுவி; பின் என்னை விடுவி,'' என்று சொன்னது. எலி அரசும் அவ்வாறே செய்து, புருக்களை விடுவித்தது. புருக்கள் எலி அரசுக்கு நன்றி கூறின.

7. அவை சேர்ந்து முயற்சி செய்ததனால் துன்பத்திலிருந்து நீங்கின. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு,' என்பது பழமொழி.

சொற்கள் :

| | | |
|---|---|---|
| வேடன் | வேட்டையாடி | விலங்கு |
| பறவை | புரு அரசு | சித்திரக்கிரீவன் |
| தெளித்து | மறைவு | சூது |
| ஆலோசித்தால் | தைரியம் | இறங்கி |
| வலை | வளை | நடுங்கின |
| புலம்பின | வேற்றிடம் | ஆச்சரியப்பட்டு |
| எட்டாமல் | வருத்தத்துடன் | இரணியகன் |
| கயிற்றை | கூறிய | அறுக்க |
| விடுவி | நன்றி | முயற்சி |

கேள்விகள் :

1. வேடன் புருக்களைப் பிடிக்க என்ன செய்தான்?
2. புரு அரசு புருக்களை என்ன சொல்லித் தடுத்தது?
3. இளம்புரு என்ன சொன்னது?
4. புரு அரசு தானும் ஏன் வலையில் அகப்பட்டுக்கொண்டது?
5. புரு அரசு கூறிய தந்திரம் என்ன?

6. வேடன் ஏன் ஆச்சரியப்பட்டான்?
7. புருக்கள் எதனுல் விடுவிக்கப்பட்டன?
8. இப்பாடத்தில் வரும் பழமொழி எது?

பயிற்சி :

1. கூரிய, கூறிய; இரங்கி, இறங்கி; வலை, வளை—இச்சொற்கள் பொருளில் எவ்வாறு வேறுபடுகின்றன?

2. வினைச்சொல் தொழிற்பெயர்

| வினைச்சொல் | தொழிற்பெயர் |
|---|---|
| மறை | மறைவு |
| | மறைதல் |
| வா | வரவு |
| | வருதல் |
| | வருகை |

செல், வாழ், ஈ—இவற்றிலிருந்து தொழிற்பெயர் எழுது.



## 6. மூடக் காக்கை

1. மந்தை மந்தையாய்ச் செம்மறியாடுகள், மேய்ந்தன. கழுகு அவைகளில் ஒன்றைக் கால்களால் இடுக்கிப் பெருமையுடனே தூக்கிப் பறந்து சென்றது.

2. அதைக் கண்ட ஒரு காக்கை, 'இன்று நானும் ஓர் ஆட்டைத் தூக்கிச் செல்வேன்,' என்றெண்ணி, மந்தையின் அருகில் பறந்து போய், ஓர் ஆட்டின் முதுகிலே உட்கார்ந்து, அதைக் கால்களால் இடுக்கித் தூக்க முயன்றது. ஆட்டின் சுருட்டை மயிர்களில் காக்கையின் விரல்கள் சிக்கிக்கொண்டன. காக்கை ஒன்றுஞ் செய்யத் தோன்ருமல், சிறகை வீசி வீசி அடித்துப் பறக்க முயன்றது.



3. அந்தச் சத்தத்தைக் கேட்டு ஆட்டுக்-காரன் வந்து காக்கையைப் பிடித்தான். காக்கை மிகவும் வருந்தியது.

சொற்கள் :

| | | |
|---|---|---|
| கழுகு | இடுக்கி | தூக்கி |
| மந்தை | சுருட்டை | முதுகில் |

கேள்விகள் :

1. கழுகு என்ன செய்தது ?
2. காக்கை என்ன செய்ய நினைத்தது ?

3. காக்கை ஆட்டைத் தூக்க முயன்றபோது என்ன நடந்தது ?

4. ஆட்டுக்காரன் என்ன செய்தான் ?

5. இக்கதையிலிருந்து நீ என்ன கற்றுக்கொள்ளு-கிறுய் ?

## பயிற்சி :

இந்தக் கதையை ஆட்டுக்காரனே சொல்வதைப் போல எழுது.

## இலக்கணம் :

1. வேடன், புரு, ஆடு, காக்கை—இவை பொருள்களைக் குறிப்பதால், பொருட்பெயர்.

2. காடு, நாடு, வீடு—இவை இடத்தைக் குறிப்ப-தால், இடப்பெயர்.

3. சமயம், பருவம், நாள், மாதம்—இவை காலத்-தைக் குறிப்பதால், காலப்பெயர்.

4. கை, கால், தலை—இவை உறுப்பு அல்லது சினையைக் குறிப்பதால், சினைப்பெயர்.

5. அன்பு, கோபம், பகைமை—இவை குணத்தை அல்லது பண்பைக் குறிப்பதால், பண்புப்பெயர்.

6. வருகை, செய்கை, ஓட்டம், அடித்தல்—இவை தொழிலைக் குறிப்பதால், தொழிற்பெயர்.

கீழ் வரும் பெயர்களை இனம் பிரித்துக் கட்டத்தில் எழுது :—

வலை, நன்மை, அன்னை, கற்றல், ஆண்டு, மலை, மணி, வாரம், பள்ளிக்கூடம், விரல், கிளை, பசுமை, பேசுதல், வளர்ச்சி.

# 7. கடிதம் எழுதுதல்

1. நாம் ஒருவரையொருவர் நேரிற்கண்டால், பேச்சு மூலம் நம் கருத்தைத் தெரிவிக்கிறோம். அயலூரிலுள்ளவர்களுக்குச் செய்தி தெரிவிக்க வேண்டுமானால், அச்செய்தியை எழுதியே தெரிவிக்க வேண்டும். இவ்வாறு எழுதித் தெரிவித்தலே **கடிதம் எழுதுதல்** எனப்படும். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் கடிதம் எழுதவும் அறிந்திருக்க வேண்டும்.

2. கடிதம் எழுதும் போது சில முறைகளைக் கவனிக்க வேண்டும். எழுதும் செய்தி நேரிலே பேசுவது போலத் தெளிவாயிருக்க வேண்டும். கடிதத்தின் வலப்பக்கத்து மூலையில் **எழுதும் இடமும் தேதியும்** எழுதப்பட வேண்டும். இடத்தைக் குறிப்பிடும் போது தெருவின் பெயர், வீட்டின் எண், ஊர்ப்பெயர் இவற்றை எழுத வேண்டும்.

3. பிறகு கடிதம் இன்னாருக்கு எழுதப் படுகிறதென்பதைக் குறிக்க வேண்டும். நண்பனுக்கு எழுதினால், 'நண்பா', என்றும், தகப்பனாருக்கு எழுதினால், 'அன்புள்ள தந்தையீர்,' என்றும், ஆசிரியருக்கு எழுதினால், 'அன்புள்ள ஆசிரியரே,' என்றும் ஆரம்பித்து எழுத வேண்டும்.

4. கடிதத்தின் செய்தி சுருக்கமாகவும் விளக்கமாகவும் அழகாகவும் எழுதப்படல் வேண்டும். கடிதத்தின் முடிவில் 'அன்புள்ள நண்பன்', 'கீழ்ப்படிதலுள்ள மகன்', 'உண்மையுள்ள மாணவன்' என்னும் சொற்றொடர்களில் ஒன்றை எழுதி அதன்கீழ் எழுதுபவர் தம் பெயரை எழுதுதல் வேண்டும்.

5. யாருக்குக் கடிதம் போய்ச் சேர வேண்டுமோ, அவர் விலாசத்தைத் தெளிவாக எழுத வேண்டும். அவர் பெயரும், வீட்டின் எண்ணும் தெருவின் பெயரும், ஊரின்பெயரும், தபால் நிலையப் பெயரும் ஒன்றன்பின் ஒன்ருக எழுதப்பட வேண்டும்.

6. பின்பு கடிதத்திற்குத் தபால் முத்திரைத்தலை வாங்கி ஒட்டித் தபாற்பெட்டியில் அதை இடவேண்டும்.

### மாதிரிக் கடிதம்–1

[ஒருவன் தன் கல்வியைப் பற்றித் தன் தந்தைக்கு எழுதும் கடிதம்.]

10, புதுத் தெரு, மதுரை.
20—8—1952

அன்புள்ள தந்தையீர்,

வணக்கம் ! இங்கு நான் உடல் நலத்துடனிருக்கிறேன். உங்கள் நலம் அறிய ஆவலுள்ளவனுயிருக்கிறேன்.

நான் நன்ருகப் படித்து வருகிறேன்; பள்ளியில் நடைபெற்ற தேர்வுகளில் முதல்வனுய்த் தேறியிருக்கிறேன்; ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சியும் செய்து வருகின்றேன்; காலையிலும் மாலையிலும் பந்தாட்டம் ஆடுகிறேன்.

டிசம்பர் மாதம் பதினைந்தாம் தேதி எங்கள் பள்ளிக்கூட விடுமுறை நாட்கள் ஆரம்பமாகும். அச்சமயம் ஊருக்கு வர எண்ணுகிறேன்.

என் அன்புள்ள தாயாருக்கு எனது தாழ்மையான வணக்கம் தெரிவிக்க வேண்டு கிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மகன்,

**மு. மாணிக்கம்**

**விலாசம் :**

திருவாளர் ப. முத்துப்பிள்ளையவர்கள்,

22, பட்டா மணியக்காரத் தெரு.

அழகனேரி

## மாதிரிக் கடிதம்–2

[ஒய்வு விண்ணப்பக் கடிதம்]

16, கோவில் தெரு,
மங்களபுரி,
4—9—1952.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,
4-ஆம் வகுப்பு,
முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, விருதுநகர்.

அன்புள்ள ஆசிரியரே,

நான் விருது நகரிலிருந்து இங்கு வந்தது முதல் எனக்குத் தலை வலியுடன் காய்ச்சலும் அதிகமாய் இருக்கின்றது. மருத்துவர் மருந்து கொடுத்து வருகிறார். அவர் நான் ஒரு வாரம் ஒய்வு கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். அதனால், தயவு செய்து, எனக்கு ஒரு வாரம் ஒய்வு அளிக்க வேண்டுமென்று தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
ம. அனவரதன்.

விலாசம் :

திருவாளர் மா. அரங்கநாதர் அவர்களுக்கு,
ஆசிரியர்,
4-ஆம் வகுப்பு,
முனிசிபல் உயர்நிலைப்பள்ளி,
விருதுநகர்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| தொடக்கம் | அன்புள்ள | ஆசிரியர் |
| ஆரம்பித்து | அழகாக | கையெழுத்து |
| கீழ்ப்படிதலுள்ள | சொற்றொடர் | விலாசம் |
| வணக்கம் | தபால் நிலையம் | தேர்வு |
| ஓய்வு | நலம் | விண்ணப்பம் |
| தலைவலி | தாழ்மை | மருத்துவர் |
| முறைகள் | காய்ச்சல் | தயவு |

### கேள்விகள் :

1. 'கடிதம்' என்பது என்ன ?
2. கடிதத்தில் முக்கியமான பகுதி எது ?
3. கடிதத்தை எவ்வாறு முடிக்கவேண்டும் ?
4. கடிதம் எழுதியபின் செய்ய வேண்டுவது என்ன ?

### பயிற்சி :

1. உன் அண்ணன் கலியாணத்துக்காக ஐந்து நாட்கள் ஓய்வு அளிக்கும்படி உன் வகுப்பு உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் எழுது.
2. இப்பாடத்திலிருந்து காலப் பெயர், இடப் பெயர் பொருட்பெயர், தொழிற்பெயர் இவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் எழுது.




## 8. கடிதத்தின் பிரயாணம்

1. முன் பாடத்தில் அனவரதன் எழுதிய கடிதம் விருதுநகருக்குப் பிரயாணஞ் செய்யும் விதத்தைக் கவனிப்போம் :

2. அனவரதன் தான் எழுதிய கடிதத்தை உறையுள் போட்டு, அதன்மீது இரண்டணுத் தபால் முத்திரைத் தலை ஒட்டி, தபாற்பெட்டியினுள் போடுகிருன்.

3. அங்குள்ள தபால் அதிகாரி அக்கடிதத்தை எடுத்து அவ்வூர்த் தபால் தேதி முத்திரையை இடுகின்ருர் ; பின்பு, அக்கடிதத்தை மற்றக் கடிதங்களுடன் சேர்த்து ஒரு பையில் இடுகிருர் ; பையைக் கயிற்றினுல் கட்டி அரக்-

கிஞல் முத்திரை வைக்கிருர். ஓர் ஆள் அப்-பையை எடுத்துக்கொண்டு போய்ப் புதுக்-கோட்டைத் தபால் நிலேயத்தில் சேர்க்கிருன்.



4. புதுக்கோட்டைத் தபால் நிலேய அதி-காரி கடிதப் பையை அவிழ்த்துக் கடிதங்களே எடுத்து, அவ்வூர்த் தபால் தேதி முத்திரையை இடுகின்ருர் ; பின்பு, விருதுநகருக்குச் செல்லவேண்டிய கடிதங்களேயெல்லாம் ஒரு பையில் இட்டுக் கட்டுகிருர் ; கடிதப் பையை அங்கிருந்து மோட்டார் மூலம் பாளேயங்கோட்-டைக்கு அனுப்புகிருர். பாளேயங்கோட்டை-யிலேதான் திருநெல்வேலி ஜில்லாவின் தலே-மைத் தபால் நிலேயம் இருக்கின்றது.

5. தலேமைத் தபால் நிலேயத்தில் கடிதங்-களேப் பைகளிற்கட்டி, முத்திரையிட்டுப் புகை வண்டி நிலேயத்துக்கு அனுப்புகிருர்கள். அங்கிருந்து புகை வண்டித் தொடர் விருது நகருக்குக் கடிதங்களேக் கொண்டு செல்லும். புகை வண்டித் தொடரில் ‘**தபால் வண்டி**’

என்னும் வண்டியிலேதான் கடிதப் பைகள் இருக்கும்.




6. புகை வண்டித் தொடர் விருது நகர் சென்றதும், அங்கிருந்து கடிதப் பைகளைத் தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள். தபால் அதிகாரி கடிதங்களின்மீது அவ்வூர்த் தபால் தேதி முத்திரை இட்டபின், தபாற்சேவகர் அக்கடிதங்களை எடுத்துக்கொண்டு போய் உரியவர்களிடம் சேர்ப்பார். அனவரதன் எழுதிய கடிதம் முனிசிபல் உயர்தரப் பள்ளிக்கூட ஆசிரியரிடம் சேர்க்கப்படும்.

| | | |
|---|---|---|
| பிரயாணம் | உறை | முத்திரைத்தலை |
| அதிகாரி | முத்திரை | அரக்கு |
| கடிதப்பை | புகை வண்டி | சேவகர் |

### கேள்விகள்

1. அனவரதன் கடிதம் எழுதியதும் என்ன செய்கிறான் ?
2. கடிதம் பாளையங்கோட்டைக்கு எப்படிச் செல்லுகிறது ?
3. கடிதம் பாளையங்கோட்டையிலிருந்து விருதுநகருக்குச் செல்லும் விதம் யாது ?

### பயிற்சி :

1. சேர்த்தெழுது :—

அ + ஊர் = அவ்வூர்
அ + ஆறு = ———
அ + ஓடம் = ———
அ + உரல் = ———

2. பிரித்தெழுது :—

அங்கிருந்து = அங்கு + இருந்து
பார்த்திருந்து = ——— + ———
மொழிக்குரிய = ——— + ———
வேறெதுவும் = ——— + ———

3. கோடிட்ட இடத்தை நிரப்பு :—

அனவரதன் —— எழுதிய கடிதத்தை —— இட்டு, அதன்மீது —— தபால் முத்திரைத்தலை ஒட்டி, —— போடுகிறான்.

4. புறா—இது ஒரே பொருளைக் குறிக்கும் பெயர்; ஆதலின், ஒருமைப் பெயர்.

புறாக்கள்—இது ஒன்றுக்கு அதிகமானவற்றைக் குறிக்கும் பெயராதலின், பன்மைப் பெயர்.

மலை, மரம், அரசன், அவன்—இவற்றிற்குப் பன்மைப் பெயர்கள் எழுது.



## 9. கயிறு திரித்தல்

1. தேங்காய் மட்டை நாருக்குச் சவுரி என்பது பெயர்.' சவுரியினுல் கயிறு, மிதி பாய் முதலியன செய்கிருர்கள். தேங்காய்ச் சவுரியிலிருந்து எவ்வாறு கயிறு திரிக்கிருர்கள் என்பதைப் பற்றிப் படிப்போம் :

2. தேங்காய்ச் சவுரியைத் தண்ணீரில் பல நாட்கள் ஊற வைக்க வேண்டும். நன்ருக ஊறிய பின் அதை எடுத்துக் கல்லின்மீது வைத்து நன்ருகத் தட்ட வேண்டும். நன்ருகத் தட்டிக்கொண்டேயிருந்தால், சவுரிகள் நுண்ணிய நார்களாகவும் சிறிது தடித்த நார்களாக-

வும் பிரியும். அந்த நார்களை வேருகக் கட்டித் தனியிடத்தில் வைப்பார்கள்.

3. இரண்டடி நீளமுள்ள இரண்டு கழி- களை எடுத்து, அவற்றில் ஒன்றின் ஓரத்தில் ஒரு துவாரமும், அரையடித் தூரத்தில் மற்- ருெரு துவாரமும் செய்துகொள்வர். அரை- யடித் தூரத்தில் செய்யப்பட்ட துவாரத்தினுள் மற்றக் கழியைத் துவாரமுள்ள கழி சுழலும்படி அமைத்துக்கொள்வர்.

4. படத்திற்காட்டியபடி ஒருவன் கழி- யைக் கையிற்பிடித்துக்கொள்ளுவான். மற்- ருெருவன் சவுரியிலிருந்து எடுக்கப்பட்ட நார்- களைக் கையால் ஓர் அடி அல்லது இரண்டடி நீளம் திரித்து, திரித்த கயிற்றின் ஒரு நுனி- யைக் கழியின் துவாரத்தினுள் செலுத்தி, முடிச்சு இடுவான்.

5. கயிறு துவாரத்தினுள் செலுத்தப் பட்டவுடன் கழியைப் பிடித்திருப்பவன் கழி- யைச் சுழற்றுவான். கழியைச் சுற்றுவதால் கயிறு முறுக்கேறும். மற்றவன் அக்கயிற்றுடன் வேறு நார்களைச் சேர்த்துக்கொண்டேயிருப்- பான். கழியை வைத்திருப்பவன் அதைச் சுழற்றிக்கொண்டே பின்னேக்கிச் செல்வான். கயிறு முறுக்கேறி, நீளமாகிக்கொண்டே வரும்.

6. மக்கள் இவ்வாறு கயிறு திரிக்கும் முறையைக் கற்றுக்கொள்வதனால், ஓய்வு நேரத்தில் இத்தொழிலைச் செய்து வரலாம். பள்ளிக்கூடச் சிறுவர்களும் இம்முறையினால் இக்கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளலாம்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| மிதிபாய் | திரித்தல் | ஊற வை |
| முறுக்கேறும் | நுண்ணிய | நார் |
| தேங்காய் | சவுரி | சுழற்று |

### கேள்விகள் :

1. கயிறு எதனால் திரிக்கப்படுகின்றது?
2. கயிறு திரிக்குமுன் செய்ய வேண்டுவது என்ன?
3. நார்களை எங்கே ஊற வைக்கின்றனர்?
4. கயிறு திரிப்பதற்கு வேண்டும் கருவிகள் யாவை?

### பயிற்சி :

1. ஊர, ஊற / களி, கழி — இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்க வாக்கியங்கள் எழுது.
2. எதிர்ச்சொற்கள் எழுது :—
   தண்ணீர், நுண்ணிய, தனியிடம்.

### இலக்கணம் :

இராமன், கோபாலன்—இவை ஆண்களைக் குறிப்பதால், ஆண்பாற் பெயர்.

அவள், மகள், மனைவி—இவை பெண்களைக் குறிப்பதால், பெண்பாற் பெயர்.

மனிதர்—இது பலரைக் குறிப்பதால், பலர்பாற்பெயர்.

(1) இராமன் ஓடினான் — இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலைகளை எழுது.

இராமன்—ஆண்பாலைத் தெரிவிக்கும் எழுவாய்.

ஓடினான்—ஆண்பால் செயலைத் தெரிவிக்கும் பயனிலை.

(2) பசு ஓடினது—பசு—ஒருமையைத் தெரிவிக்கும் எழுவாய்.

ஓடினது—ஒருமையைத் தெரிவிக்கும் பயனிலை.

பசுக்கள் ஓடின—பசுக்கள்—பன்மையைத் தெரிவிக்கும் எழுவாய்.

ஓடின—பன்மையைத் தெரிவிக்கும் பயனிலை.

எழுவாய் பயனிலைகள், பால், எண் இவற்றில் ஒத்திருக்க வேண்டும்.

சீதை உண்டாள். பசு மேய்ந்தது. கிருஷ்ணன் எழுதினான். மனிதர் ஓடினர். புறாக்கள் பறந்தன.—இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைகளை எடுத்தெழுதி, பாலையும் எண்ணையும் குறிப்பிடு.

குறிப்பு :—மனிதர் அல்லாத உயிர்கள் யாவும் ஆண் பெண் என்று பிரித்துப் பால் கூறப்படுவதில்லை. ஒருமை பன்மை என்னும் பிரிவுகளே அவைகளில் உண்டு.

பசு—ஒருமை—ஒன்றன் பால்.

பசுக்கள்—பன்மை—பலவின் பால்.

## 10. உல்லாசப் பிரயாணம்

1. எங்கள் ஊர் மங்களபுரி. அவ்வூரில் ஆரம்பப் பள்ளி இருக்கின்றது. எங்கள் ஆசிரியர், எங்களை மதுரைக்கு அழைத்துச் சென்றனர். இருபது மாணவர்களும் ஆசிரியரும் மதுரைக்குச் சென்றோம்.

2. எங்கள் ஊர் வழியாகப் பாளையங்கோட்டைக்குச் செல்லும் மோட்டாரில் ஏறினோம். அது சுமார் காலை ஒன்பது மணிக்கு எங்கள் ஊரிலிருந்து புறப்பட்டது. நாங்கள் பன்னிரண்டு மணிக்குப் பாளையங்கோட்டையைச் சேர்ந்தோம். அங்கிருந்து மற்றொரு மோட்டாரில் ஏறிப் புகை வண்டி நிலையத்தை அடைந்தோம். எங்கள் ஆசிரியர் குறைந்த கட்டணப் பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்து, எங்களுக்கு டிக்கட்டு வாங்கினர். நாங்கள் புகை வண்டி நிலையத்தில் இருக்கும் சிற்றுண்டிச் சாலையில் பகல் உணவு கொண்டோம். பின்பு, புகைவண்டித் தொடரிலுள்ள மூன்றும் வகுப்பு வண்டியில் ஏறியமர்ந்தோம். புகை வண்டி ஒன்றரை மணிக்குப் புறப்பட்டது.

3. நாங்கள் இதற்கு முன் புகை வண்டியில் பிராயாணம் செய்ததே இல்லை. அதனால்,

எங்களுக்கு அப்பிரயாணம் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. வழியில் பயிர்கள் வளர்ந்து செழித்துக் காணப்பட்டன. மரங்களும் தந்திக் கம்பிகளும் ஓடுவதுபோலக் காணப்பட்டன. வண்டி பாலங்களைக் கடந்து செல்லும்போது கடகடவென்ற சத்தம் எங்கள் செவிக்கு இன்பம் தந்தது. நிலையங்களில் வண்டி நின்றதும் மக்கள் ஓடிவந்து வண்டியில் ஏறுவதும் இறங்குவதும் எங்களுக்கு வேடிக்கையாய் இருந்தது. நேரம் கழிந்ததே எங்களுக்குத் தெரியவில்லை. சுமார் ஆறு மணிக்கு மதுரையை அடைந்தோம்.

4. நாங்கள் வரிசையாக ஆசிரியர் பின்னே வண்டியிலிருந்து இறங்கினோம். பாலத்தின்மீது ஏறிப் புகைவண்டி நிலையத்தைக் கடந்து வெளியே வந்தோம். மதுரையின் பெருமையைப் புத்தகங்களில் வாசித்த எங்களுக்கு மதுரையைக் கண்டதும் அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

5. புகைவண்டி நிலையத்துக்கு எதிரே உள்ள பாதை வழியாக **இராணி மங்கம்மாள் சத்திரத்துக்குச்** சென்றோம். அங்குச் சத்திரக் கணக்கர் நாங்கள் தங்க மூன்று அறைகளை எங்களுக்கு அளித்தனர். நாங்கள் எங்கள் சாமான்களை அந்த அறையில் வைத்து, கத-

வைச் சாத்திப் பூட்டிக்கொண்டு, மதுரைக் கடைத்தெருவிற்குச் சென்று, கடைகளைக் கண்டு களித்தோம். பின்பு சத்திரத்திற்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கச் சென்றோம்.

6. மறு நாள் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, மதுரை நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். எங்கள் ஆசிரியர் மதுரையின் வரலாற்றை எங்களுக்குச் சொல்லிக்கொண்டே வந்தார்.

7. மதுரை பழமையான நகரம். முற்காலத்தில் அது வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் சிறந்து இருந்தது. அயல் நாட்டு வணிகர் வியாபாரத்துக்காக அங்கு வந்தனர். அப்பொழுது கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், முசிறி என்பவை தமிழ்நாட்டுத் துறைமுகங்களாயிருந்தன. மதுரை கடலிலிருந்து சிறிது தூரத்தில் இருந்தது. அதைச் சுற்றி ஒரு பலமான மதிலும், மதிலையடுத்து ஆழமான அகழியும் இருந்தன. அதற்கு நான்கு வாயில்கள் இருந்தன. ஒவ்வொரு வாயிலிலும் ஒவ்வொரு பெரிய கோபுரம் இருந்தது.

8. மதுரையில் பாண்டிய அரசர் ஆண்டு வந்தனர். அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஒன்று திரட்டித் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தி-

ஞர்கள். அப்புலவர்கள் **சங்கப்புலவர்கள்** என்று வழங்கப்பட்டார்கள். மதுரையில் ஒன்றன் பின் ஒன்ருக மூன்று தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றன.

9. இவ்வளவு சிறப்புள்ள மதுரை கடலில் மூழ்கிவிட்டது. அந்நகரிலுள்ளவர்கள் மேற்-



கில் சென்று, ஒரு புதிய நகரை உண்டாக்கினர். அதுவே இப்பொழுதுள்ள மதுரை.

10. புது மதுரையும் அழகான பட்ட-ணமே. இதில் பல உயர்ந்த கட்டடங்கள் இருக்கின்றன. இங்குள்ள **திருமலை நாயக்கர் மஹால்** மிகவும் சிறந்தது. அதில் உள்ள பெரிய பெரிய தூண்களும், விசாலமான முற்-றமும், உயர்ந்த சுவர்களும் எங்களுக்கு வியப்பை அளித்தன. **மீனுக்ஷியம்மன்** கோவி-லும், அதை அடுத்துள்ள **புது மண்டபமும்** மிக அழகானவை! அங்கு நாங்கள் யானை-களையும், வியாபாரப் பொருள்களையும் கண்டு ஆச்சரியமும் களிப்பும் கொண்டோம்.

11. புது மண்டபம் முந்நூறு அடிக்கு மேல் நீளமுள்ளது. அதைச் சுற்றி ஓர் அகழி இருக்கின்றது. அந்த மண்டபத்தைக் கட்ட இருபது லக்ஷம் பொன் செலவானதாம். அதைக் கட்டி முடிக்க இருபத்திரண்டு ஆண்டு கள் சென்றனவாம்.

12. மதுரையிலுள்ள **மாரியம்மன் தெப்-பக்குளம்** மிகப் பெரியது. அதன் நடுவில் ஒரு கோவில் இருக்கிறது. கோவிலைச் சுற்றி ஓர் அழகிய தோட்டம் இருக்கிறது. அதில் மா, பலா, வாழை, தென்னை முதலிய மரங்கள் இருக்கின்றன.

13. மதுரையில் நெசவுத் தொழில் அதி-கம். **சௌராஷ்டிரர்கள்** அத்தொழிலைச் செய்-

கிருர்கள். அவர்கள் பட்டும் சரிகையும் கலந்த வேஷ்டிகளும், புடவைகளும் நெய்கின்ருர்கள். மதுரையில் புடவைக் கடைகள் அதிகம். அங்கு **அமெரிக்கன் கல்லூரி**, **மதுரைக் கல்லூரி**, **தியாகராயர் கல்லூரி** என்னும் மூன்று கல்லூரிகளும், பெண்களுக்கென **டோக்கு அம்மையார் கல்லூரியும்**, பல உயர்தரப் பாடசாலைகளும் இருக்கின்றன.

14. மதுரையில் காண்பதற்கு உரியவற்றைக் கண்டு களித்தபின், நாங்கள் மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டோம். **திருப்பரங்குன்றம்**, **திருமங்கலம்**, **விருதுநகர்** முதலிய இடங்களையும் பார்த்துவிட்டுப் புகை வண்டித் தொடரில் திருநெல்வேலிக்கு வந்தோம். அங்கிருந்து எங்களூருக்கு மோட்டாரில் வந்து சேர்ந்தோம்.

15. இவ்வாறு **ஜனுவரி** மாதம் இருபதாம் தேதி எங்கள் ஊரிலிருந்து புறப்பட்ட நாங்கள், இருபத்து நான்காம் தேதி மாலை எங்கள் ஊருக்குத் திரும்பினேம். எங்களை உல்லாசப் பிரயாணம் அழைத்துச் சென்ற எங்கள் ஆசிரியருக்கு நாங்கள் நன்றி செலுத்தினேம்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| டிக்கட்டு | சிற்றுண்டி | சரிகை |
| தந்திக்கம்பி | பாலங்கள் | கட்டணம் |
| சத்திரம் | கணக்கர் | களித்தோம் |
| வரலாறு | கொற்கை | அகழி |
| துறைமுகம் | மதில் | நடைபெற்றன |
| வாயில்கள் | கோபுரம் | முற்றம் |
| மூழ்கி | கட்டடங்கள் | நெசவு |
| மண்டபம் | தெப்பக்குளம் | புடைவை |
| பட்டு | | |

### கேள்விகள் :

1. ஆசிரியரும் மாணவரும் மங்களபுரியிலிருந்து புகைவண்டி நிலையத்திற்கு எதில் பிரயாணஞ்செய்தனர்?
2. திருநெல்வேலியிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் அவர்கள் கண்டவை யாவை?
3. முதல் நாள் மதுரையில் அவர்கள் கண்டவை யாவை?
4. மதுரையில் அவர்கள் பார்த்த பெரிய கட்டடம் எது?
5. மதுரையிலுள்ள பெரிய தெப்பக்குளத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
6. மதுரையிலுள்ள கல்லூரிகள் எவை?
7. திரும்பும் வழியில் அவர்கள் பார்த்த ஊர்கள் எவை?

### பயிற்சி :

1. ஆசிரியர் மதுரையைப்பற்றிக் கூறியவற்றைப் பதினைந்து வரிகளில் எழுது.
2. கீழ்வரும் சொற்கள் இன்ன பெயர்ச்சொற்கள் என்பதை எழுது :—
காலை, பாளையங்கோட்டை, நிலையம், உணவு, பகல், பெருமை, சத்திரம், வணிகர்.

3. கொடுக்கப்பட்ட சொற்களுக்கு எதிர்ச்சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்பு :—

ஏறுவது × இறங்குவது
உயர்வு ——
இரவு ——
காலை ——
பழமையான ——

4. ஒரே அர்த்தமுள்ள வேறு சொல் தொடர்களை எழுது :—

(1) தூங்கச் சென்றோம்—நித்திரை செய்யப் போனோம்.
(2) வியப்பை அளித்தன — ————————
(3) சங்கங்கள் நடைபெற்றன — ————————

### இலக்கணம் :

அவர்கள் நெய்கின்றார்கள் – எழுவாயும் பயனிலையும் பன்மை. ஆசிரியர் கூறினர் – எழுவாய் ஒருமை; பயனிலை பன்மை. எழுவாய் பயனிலைகள் எண், பால் இவற்றில் ஒத்திருக்க வேண்டும். இரண்டாம் வாக்கியத்தில், ஆசிரியர் – ஒரு பொருள் – ஒருமை எழுவாய் ; பயனிலை – கூறினர் – பன்மைப் பயனிலை. இது வாக்கியப் பிழை. ஆயினும், தமிழில் உயர்வு கருதி, ஒருமையைப் பன்மையாகக் கூறுவது வழக்கம். இது உயர்வு அல்லது மரியாதைப் பன்மை எனப்படும்.

# 11. பெருந்தன்மை

1. ஆர்க்காட்டுக்கு நான்கு மைல் தொலைவிலுள்ளது லாலா பேட்டை என்னும் ஊர். அவ்வூரில் வசித்தவர் கோவிந்தராகவ ஐயர் என்னும் பெரியார். அவர் ஏழைகளின் மீது இரக்கம் உள்ளவர்; பெரிய பணக்காரர்; ஆயினும், பணக்காரர் என்ற கர்வம் இல்லாதவர். அவர் தம் வீட்டுக்கு வரும் எளியவர்களையும் மரியாதையுடன் உபசரிப்பார்; எளிய மாணவருக்கும் உதவி செய்வார்.

2. அவர் வீட்டில் மணியன் என்னும் வேலைக்காரன் இருந்தான். அவன் அவ்வீட்டில் பத்து ஆண்டுகள் உண்மையுடன் உழைத்து வந்தான். அவனிடம் அவ்வீட்டார் யாவரும் அன்பு வைத்திருந்தனர்.

3. ஒருநாள் அவ்வீட்டில் தங்கச் சங்கிலி ஒன்று காணுமற்போய்விட்டது. எல்லாரும் அதைத் தேடினர். வீடு முழுவதும் தேடிப் பார்த்தும், அது கிடைக்கவில்லை. சிலர் தோட்டத்திலும் தேடினர். அங்கும் அதைக் காணவில்லை. மேசைகள், அலமாரிகள் யாவும் சோதிக்கப்பட்டன. மணியனும் தேடினான். பலன் இல்லை. அதைப்பற்றிச் சில நாட்களில் யாவரும் மறந்துவிட்டனர்.

4. சில நாட்களுக்குப் பின், மணியன் ஊரிலுள்ள தன் தாயைப் பார்க்க விரும்புவதாகக் கூறினான். ஐயர் அவனுக்கு அனுமதி அளித்து, இருபது ரூபாயும் கொடுத்தார். அவன் சந்தோஷத்துடன் வெளியே சென்றான்.

5. மணியன் கடைத் தெருவுக்குச் சென்று, காசுக் கடைக்காரரிடம் ஒரு சங்கிலியைக் கொடுத்தான். வியாபாரி அச்சங்கிலியின் நிறை எவ்வளவு என்று கேட்டார். அவன், 'எனக்குத் தெரியாது,' என்றான். அவருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவர் உண்மையை அறிய விரும்பினார்; அவனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே, போலீஸ் சேவகனை அழைத்துவர ஓர் ஆளை அனுப்பினார். போலீஸ் சேவகனைக் கண்டு மணியன் ஓட ஆரம்பித்தான். அவனைப்போலீஸ் சேவகன் பிடித்துக்கொண்டான்.

6. அவன் மணியனை இன்ஸ்பெக்டரிடம் அழைத்துப் போனான். மணியன் இன்ஸ்பெக்டரிடம் அச்சங்கிலியைத் தனக்குக் கோவிந்தராகவ ஐயர் கொடுத்தார் எனக் கூறினான். அவன் சொன்னது உண்மைதானா என்பதை அறிந்துவர இன்ஸ்பெக்டர் மணியனுடன் ஒரு போலீஸ் சேவகனை அனுப்பினார்.

7. அவர்கள் கோவிந்த ராகவ ஐயர் வீட்டுக்குச் சென்றார்கள். ஐயர் அவர்களைக் கண்டதும் போலீஸ் சேவகனை நோக்கி, 'என்ன செய்தி?'' என்றார். போலீஸ் சேவகன், 'இந்தத் தங்கச் சங்கிலி உங்களுடையதுதானா? இதை நீங்கள் இவருக்குக் கொடுத்தீர்களா?' என்று கேட்டு, நடந்தவற்றைக் கூறினான். அதைக் கேட்ட ஐயர், "மணியன் சொல்லியது உண்மைதான்; அவனுக்கு நானே இதைக் கொடுத்தேன்; நீ சந்தேகப்படக் காரணம் என்ன?'' என்றார். மணியனுக்கு இதைக்கேட்ட-தும் ஆச்சரியம் உண்டாயிற்று. அவனுக்கு வெட்கம் ஏற்பட்டது. அவன் தலை குனிந்து நின்றான்.

8. போலீஸ் சேவகன், "நீங்கள் கொடுத்-ததாகத்தான் சொன்னார்; ஆயினும், இவர் செய்கை எங்களுக்குச் சந்தேகத்தை உண்-டாக்கியது,'' என்று கூறி ஐயரிடம் சங்கிலி-யைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

9. ஐயர் மணியனுக்கு நல்லுரைகள் கூறினார். அன்று முதல் மணியன் நல்லவனாய் மாறிவிட்டான்; ஐயரது பெருந்தன்மையை எண்ணி எண்ணி அவரை வாயாரப் புகழ்ந்-தான்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| அலமாரி | வாயார | இன்ஸ்பெக்டர் |
| எடை | தங்கச்சங்கிலி | நிறை |
| வெட்கம் | சோதிக்கப்பட்டன | சந்தேகம் |

### கேள்விகள் :

1. கோவிந்த ராகவ ஐயர் எப்படிப்பட்டவர் ?
2. மணியன் செய்த குற்றம் என்ன ?
3. அவன் குற்றம் ஐயருக்கு எப்படித் தெரிந்தது ?
4. மணியனே திருடியவன் என்று அறிந்தும் ஐயர் என்ன செய்தார் ?
5. மணியன் பின்பு எப்படி நடந்தான் ?

### பயிற்சி :

1. ஒரே பொருளுள்ள சொற்களை ஒன்றுக்குப் பின் ஒன்ருக எழுது :—

நிறை, ஆச்சரியமாக, எடை, வியப்பாக, செயல், செய்கை.

2. ஐயர் கூறினர்.

—இது என்ன பன்மை ?



## 12. வெள்ளப் பெருக்கால் நேர்ந்த சேதம்

1. புளியம்பட்டி என்பது ஒரு சிறிய கிராமம். அதன் மேற்குப்பகுதியில் பெரிய ஏரி இருக்கின்றது. அதனை அடுத்து வயல்களும், தோட்டங்களும் இருக்கின்றன. அங்கு வயலில் வேலை செய்யும் குடியானவர் வசிக்கின்றனர். அவர்கள் வீடுகள் மண்ணால் கட்டப்பட்டுப் பனை ஓலைகளால் வேயப்பட்டவை.

2. ஒருநாள் விடாமழை பெய்தது. பககங்களிலுள்ள குளம், ஆறு முதலியவைகளில் நீர்

நிரம்பி வழிந்தோட ஆரம்பித்தது. ஏரி நிறைந்தது. மேலும் மழை பெய்துகொண்டே இருந்தது. குடியானவர் கலக்கமடைந்தனர்.

3. அவர்கள் மண்வெட்டிகளுடன் ஏரியின் கரைக்குச் சென்ருர்கள்; கரையைப் பலப்படுத்தக் கூடைகூடையாக மண்ணை வெட்டி அதன்மீது போட்டுக்கொண்டேயிருந்தார்கள். ஒரு பெரிய வெடிப்பை ஒருவரும் கவனிக்கவில்லை. திடீரென வெடிப்புள்ள இடத்தில் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. குடியானவர்கள் உடைப்பின் வழியே பெருகும் நீரைத் தடுக்க முடியாமல் தவித்தார்கள். வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்க முடியுமா? பலர் தம் வீட்டை நோக்கி ஓடினர்.

4. உடைப்பின் வழியே வெளிப்பட்ட வெள்ளம் பயிர்களை அழித்தது. மரங்கள் வேருடன் சாய்ந்தன; வீடுகள் விழுந்தன; மக்கள் வீடிழந்து, மழையில் நடுங்கிக்கொண்டு நின்ருர்கள். ஆடு மாடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. வீடுகளிலுள்ள சாமான்களும் அடித்துக்கொண்டு போகப்பட்டன. அது மிகவும் பரிதாபகரமான காட்சியாய் இருந்தது.

14/7/70 TB 031 (42)

5. ஏழைக் குடியானவர் இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவுமின்றிப் பரிதவித்தனர். திடீரென ஏற்பட்ட வெள்ளம் அவர்கள் உடைமைகளையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அவர்கள் வயல்கள் தோட்டங்கள் முதலியன பாழாயின. அவர்கள் பிழைப்புக்கு உதவியாய் இருந்த ஏரியே அவர்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிட்டது!

6. பக்கத்தூரில் குடியிருந்த மக்கள், அவர்கள் நிலைக்கு இரங்கி, பாதுகாப்பு நிதி சேர்க்க ஆரம்பித்தார்கள். குடியானவர் பலர் உதவி செய்தனர். அப்பணத்தைக்கொண்டு வீடிழந்த மக்களுக்குச் சிறிய வீடுகளைக் கட்டிக் கொடுத்தனர்; உணவுக்காகத் தானியம் வாங்கிக் கொடுத்தனர். ஏரியிலுள்ள நீர் முழுவதும் வெளியே சென்றுவிட்டதால், சாகுபடி செய்யத் தண்ணீர் இல்லை. பக்கங்களிலுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துப் பயிர் செய்ய வசதி செய்து கொடுத்தனர்; ஏரியின் கரையைச் செப்பனிட்டனர். அரசாங்கத்தாரும் அம்மக்களுக்கு உதவியளித்தனர்; ஏரியின் கரையைப் பலப்படுத்துவதற்கும் முயற்சி செய்தனர்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| வேயப்பட்டவை | பாதுகாப்பு | கரை |
| கலக்கம் | விடாமழை | உடைப்பு |
| வெடிப்பு | மண் வெட்டி | பரிதாபகரம் |
| தவித்தனர் | சாய்ந்தன | உடுக்க |
| வெள்ளம் | உடைமை | உடை |
| காட்சி | பாழாயின | பிழைப்பு |
| திடீரென | செப்பனிட்டனர் | பலப்படுத்து |

### கேள்விகள் :

1. புளியம்பட்டியின் மேற்குப்பகுதியில் உள்ளது என்ன ?
2. அதன் பக்கத்தில் காணப்படுவன யாவை?
3. விடா மழை பெய்ததனுல் நேர்ந்தது என்ன ?
4. குடியானவர்கள் என்ன செய்தார்கள்?
5. ஏரி உடைந்ததனுல் விளைந்தது என்ன ?
6. குடியானவர்களுக்கு உதவி செய்தவர் யார் ?
7. அவர்கள் எப்படி உதவி செய்தார்கள்?

### பயிற்சி :

1. வெள்ளத்திலுல் ஏற்பட்ட சேதத்தைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.
2. கரை, கறை<br>வெள்ளம், வெல்லம்<br>மலே, மழை } இச்சொற்களின் அர்த்த வேறுபாட்டை எழுது.
3. உடை, பிழை—இவற்றிற்கு இரு பொருள் எழுது.

4. கோடிட்ட இடத்தைத் தகுந்த சொல்லை இட்டு நிரப்பு.

(1) சிறுவர் —— நின்றனர்.

(2) ஏரியின் கரையை ——

(3) அவர்கள் —— மண்ணைப் போட்டுவிட்டது.

### இலக்கணம் :

உலகத்திலுள்ள பொருள்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பிரிவு 'திணை' எனப்படும்.

மனிதன் பகுத்தறிவு உள்ளவன்—உயர்ந்த பிரிவு—உயர்திணை.

| | | |
|---|---|---|
| விலங்கு, பறவை, கல், மண் முதலியன | பகுத்தறிவு இல்லாதவை | உயர்வு அல்லாத திணை— அஃறிணை. |

| | | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| உயர்திணை— | | ஆண்பால்—அவன். | பலர்பால்—அவர். |
| | | பெண்பால்—அவள். | அவர்கள். |
| அஃறிணை | | ஒன்றன்பால்—அது. | பலவின்பால்-அவை. |

இவை படர்க்கை இடத்துக்கு உரியவை.

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்தெழுதி, அவற்றிற்குத் திணை, பால், எண், இடம் கூறு :—

1. குடியானவர் கலங்கினர்.
2. மரங்கள் சாய்ந்தன.
3. மழை பெய்தது.
4. ஆடு மாடுகள் சென்றன.
5. மாணவன் படிக்கிறுன்.



# 13. ஔவையார்

1. நமது தமிழ் நாட்டில் ஔவையார் பிறந்து, நீண்ட காலம் வாழ்ந்தனர் ; நாட்டு மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றனர். அரசர்களும் அவரைப் போற்றினர்கள். ஔவையார் சிறுவர்களுக்குப் பல செய்யுட்களை இயற்றினர். ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், மூதுரை என்பவை அவர் இயற்றிய நூல்கள்.

2. அதியமான் என்னும் அரசன் அவருக்கு ஒரு கருநெல்லிக்கனி கொடுத்தான்.

அதைத்தின்று அவர் நெடுங்காலம் வாழ்ந்-தார். ஔவைப் பாட்டி என்றே தமிழ் மக்கள் அவரை அன்புடன் வழங்குகின்றார்கள்.

3. ஔவையார் வாக்குத் தெய்வத் தன்மையுடையது என்பது மக்கள் எண்ணம். தொண்டைமான் என்பவன் அதியமானுடன் சண்டை செய்ய எண்ணினான். ஔவையார் அவனிடம் தூது சென்றார் ; அதியமான் போர் வன்மையை அவனுக்கு எடுத்துக் கூறினார். அவனும் போர் செய்யும் எண்ணத்தை விட்டொழித்தான்.

4. பறம்பு நாட்டை ஆண்டவன் பாரி என்னும் வள்ளல். அவன் கொடையிற் சிறந்-தவன். அவன் ஊருக்கு ஔவையார் சென்றார். பாரி அவருடன் அளவளாவி இன்பமடைந்-தான் ; தன்னிடம் பல நாட்கள் ஔவையார் தங்க வேண்டுமென்று நினைத்தான். ஔவை-யார் வேற்றிடஞ் செல்ல விரும்பி, விடை கேட்டார். அதனால், அவருக்குப் பல பொன் ஆபரணங்களைக் கொடுத்தான். அவர் அவ்-விடம் விட்டுச் சென்றார். பாரி அவர் பின் சில காவலரை அனுப்பினான். அக்காவலர் ஔவை-யாரிடமிருந்து ஆபரணங்களைப் பறித்துக்-கொண்டனர். ஔவையார் பாரியிடம் திரும்பிச் சென்று, முறையிட்டார். அவனும் ஆபரணங்-

களைக் கவர்ந்தவர் யார் என்பதை விசா-ரிப்பதாகச் சொன்னான். அதனால், ஔவையார் அங்குப் பல நாட்கள் தங்கவேண்டியதாயிற்று. பின்பு பாரி முன்னிலும் அதிகமான பொன் ஆபரணங்களைக் கொடுத்து அவரை அனுப்-பினான்.

5. பாரியைப் பாண்டியன், சோழன், சேரன் என்ற தமிழ் நாட்டு மூவேந்தரும் சேர்ந்து எதிர்த்தனர்; ஆனால், பாரியை ஜயிக்க முடியவில்லை; அதனால், அவனை வஞ்ச-கத்தால் கொன்றனர். அவனுடைய பெண்கள் **அங்கவை, சங்கவை** என்பவர்கள். அவர்-களைப் பாரியின் நண்பர் **கபிலர்** அழைத்துச் சென்று, அந்தணர் ஆதரவில் விட்டுவிட்டு, நண்பனாகிய பாரியின் பிரிவைச் சகியாமல் உயிர் துறந்தனர். இச்செய்தியை ஔவையார் அறிந்தனர். அவர் மனம் துடித்தது. அவர் பாரியின் அன்பை நினைத்து மனம் உருகினார்; அவன் பெண்களிருக்குமிடத்தை அடைந்தார். வழியில் மழை பெய்தது. அவர் மழையில் நனைந்துகொண்டே சென்றார். பாரியின் பெண்கள் நீலச் சிற்றாடை ஒன்றை அவருக்குக் கொடுத்தார்கள்.

6. திருக்கோவலூர் அரசன் **தெய்விகன்.** அவனிடம் ஔவையார் சென்றார்; பாரி

மகளிரைப் பற்றிக் கூறினர். அவன் அவர்களை மணக்கச் சம்மதித்தான். மூவேந்தரும் அக்கலியாணத்துக்கு வந்திருந்தனர். ஔவையார் மணமக்களை வாழ்த்தினர்.

7. ஔவையாருக்கு மக்கள் கோவில் கட்டியிருக்கின்றனர்கள்; அவர் பெயரால் மடங்கள் அமைத்துள்ளார்கள். தமிழ்ப் புலவராகிய ஔவையார் தமிழ் மக்கள் மனத்தில் என்றும் நிலைபெற்றிருக்கின்றனர்.

சொற்கள் :

| | | |
|---|---|---|
| மதிப்பு | மடங்கள் | நனைந்து |
| தெய்வத்தன்மை | மூதுரை | தெய்விகன் |
| அதியமான் | தொண்டைமான் | நெல்லிக்கனி |
| காவலர் | ஆபரணங்கள் | விசாரிப்பதாக |
| பாரி | பறம்பு நாடு | மூவேந்தர் |
| ஆதரவு | சோழன் | கபிலர் |
| உயிர் துறந்தனர் | அங்கவை | நீலச்சிற்றுடை |
| திருக்கோவலூர் | சங்கவை | சம்மதித்தான் |

கேள்விகள் :

1. ஔவையார் என்பவர் யார்?
2. அவர் இயற்றிய நூல்கள் யாவை?
3. அரசர்கள் அவருக்கு அஞ்சக் காரணம் என்ன?
4. ஔவையார் தொண்டைமானிடம் ஏன் தூது சென்றனர்?

5. பாரி ஔவையார் மீது அன்புள்ளவன் என்பதை எப்படிக் காண்பித்தான் ?

6. பாரி எப்படி இறந்தான் ?

7. பாரியின் பெண்கள் யார் ?

8. அவர்களுக்கு உதவி செய்தவர் யார் ?

9. ஔவையார் அவர்களுக்கு என்ன உதவி செய்தார் ?

10. தமிழ் மக்கள் ஔவையார் மீதுள்ள அன்பை எவ்வாறு காண்பித்திருக்கிறுர்கள் ?

## பயிற்சி :

1. கீழ் வருவனவற்றின் அர்த்தம் உள்ள சொற்களை அவற்றிற்கு நேரே எழுது :—

நீண்ட காலம், செய்த, பழம், வயது சென்றவள், கொடுத்தல், தந்திரம், சம்பாஷித்து, நகை.

| | |
|---|---|
| கனி | கொடை |
| கிழவி | ஆபரணம் |
| நெடுங்காலம் | அளவளாவி |
| உபாயம் | இயற்றிய |

2. பிரித்தெழுது :—

பொன்னுபரணம் = பொன் + ஆபரணம்
கல்லெறிந்தான் = —— ——
பல்லுடைந்தது = —— ——

3. சேர்த்தெழுது :—

அன்பு + உள்ளவன் = அன்புள்ளவன்
வேண்டுவது + ஆயிற்று = ——
வேறு + இடம் = ——
நிலைபெற்று + இருக்கின்றுர் = ——

### இலக்கணம் :

மாணவன் நேற்று வியாசம் எழுதினான்—எழுதினான் என்ற வினைச்சொல், முன்பு நடந்த தொழிலைத் தெரிவிக்கின்றது—இது இறந்த கால வினைமுற்று.

மாணவன் இன்று கடிதம் எழுதுகிறான்—எழுதுகிறான் என்ற வினைச்சொல், இப்பொழுது நடக்குந் தொழிலைத் தெரிவிக்கின்றது—இது நிகழ்கால வினைமுற்று.

மாணவன் நாளை பாடம் எழுதுவான்—எழுதுவான் என்ற வினைச்சொல் இனிமேல் நடக்குந் தொழிலைத் தெரிவிக்கின்றது—இது எதிர்கால வினைமுற்று.

வினைச்சொல் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களைத் தெரிவிக்கும்.

இராமன் என்ற எழுவாயுடன் கீழ் வரும் வினைச்சொற்களைப் பொருத்தி எழுது :—

| வினைச்சொல் | எழுவாய் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|---|
| போ | இராமன் | —போனான் | போகிறான் | போவான் |
| வா | ,, | — —— | —— | —— |
| ஓடு | ,, | — —— | —— | —— |
| கேள் | ,, | — —— | —— | —— |

# 14. திருவிழாப் பார்க்கச் செல்லுதல்

[முத்து, கண்ணனூரில் வசிப்பவன். அவன் வள்ளியூரில் நடைபெறும் தெப்பத் திருவிழாவுக்குச் செல்கின்ருன். வழியில் அவன் நண்பன் சுந்தரம் அவனைச் சந்திக்கிருன்.]

**சுந்தரம் :** முத்து, நீ எங்கே செல்கிருய்?

**முத்து :** வள்ளியூரில் தெப்பத்திருவிழாப் பார்க்கச் செல்கிறேன். நீயும் வருகிருயா?

**சுந்தரம் :** வருகிறேன். அங்கு என்ன பார்க்-கலாம்?

**முத்து :** அங்கு மக்கள் ஏராளமாக வந்திருப்-பார்கள். கூட்டம் அதிகமாய் இருக்கும். கடைகள், வண்டிகள், இராட்டினங்கள் முதலியவற்றைக் காணலாம்; பற்பல வேடிக்கைகளும் நடைபெறும்.

[இருவரும் செல்கின்றனர். மக்கள் கூட்டமாகச் செல்-கின்ருர்கள்.]

**சுந்தரம் :** என்ன! இத்தனை பேர் திருவிழாப் பார்க்கச் செல்கின்றனரே!

**முத்து :** இதென்ன கூட்டம்! கோவில் பக்கம் பார்!

**சுந்தரம் :** ஆமாம்! கூட்டம் அதிகமாய்த்-தானிருக்கின்றது! இன்னும், ஆண்களும்

பெண்களும் குழந்தைகளும் வந்துகொண்டிருக்கின்றார்களே !

முத்து : இவர்கள் பக்கத்துக் கிராமங்களிலிருந்து வருகின்றார்கள். சிலர் நேற்றே வந்தனர். நாளைக்கும் சிலர் வருவர்.

சுந்தரம் : நீ சொன்னபடி கடைகள் வந்திருக்கின்றன. இராட்டினங்கள் எங்கே ?

முத்து : அவை பாதையின் பக்கத்திலிருக்கின்றன. அங்கே போவோம், வா.

[போகின்றனர்]

சுந்தரம் : இராட்டினத்தில் ஏறுவோமா ?



முத்து : சரி ; நீ எதன்மீது ஏறப்போகிருய் ?

சுந்தரம்: தொட்டில்கள், சிங்கங்கள், புலிகள், குதிரைகள் முதலியன இராட்டினத்தில் தொங்குகின்றனவே! நான் குதிரையின்மீது ஏறி அமர்கின்றேன்.

முத்து: நான் சிங்கத்தின்மீது ஏறி அமர்கின்றேன்.

[இருவரும் இராட்டினத்தில் ஏறிச் சுற்றுகிறார்கள். முப்பது சுற்றுச் சுற்றிய பின் கீழே இறங்குகின்றனர்.]

முத்து: சுந்தரம், கடைகளைப் போய்ப் பார்ப்போம், வருகிறாயா?

சுந்தரம்: சரி, வருகிறேன். முதலில் நீர்மோர் குடித்துவிட்டுப் போவோம்.

முத்து: அங்கே வழிப்போக்கர்களுக்கு நீர்மோரும், பானக நீரும் வழங்குகிறார்கள். அங்கே போய்க் குடிக்கலாம்.

சுந்தரம்: அது தருமத்திற்காகத் திருவிழாச் சமயத்தில் வழங்கப்படுகின்றதா?

முத்து: ஆம்; கோடை காலத்திலும் வெயிலில் வழி நடப்பவருக்கு ஆங்காங்கே இவ்வாறு நீர்மோர் வழங்குவர்.

சுந்தரம்: கடைகளில் விளையாட்டுச் சாமான்களும், பென்சில்களும், பல வர்ணமுள்ள பலூன்களும் இருக்கின்றனவே!

**முத்து :** ஆம்; வா, நாம் அடுத்த தெருவுக்குப் போவோம். அங்கே மிட்டாய்க் கடைகள் இருக்கின்றன.

**சுந்தரம் :** நாமும் சில தின் பண்டங்களை வாங்குவோம்.

[இருவரும் வாங்கித் தின்றுகொண்டே தெப்பமிருக்குமிடம் செல்கின்றனர்; தெப்பம் குளத்தில் மிதந்து வருவதைப் பார்த்தபின் தம் ஊருக்குத் திரும்புகின்றனர்.]

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| திருவிழா | புலிகள் | தின் பண்டம் |
| தெப்பம் | சுற்று | தொட்டில்கள் |
| கண்ணனூர் | வழிப்போக்கர் | தொங்குகின்றன |
| ஏராளம் | பாதை | வழங்குகிறார்கள் |
| இராட்டினங்கள் | நீர்மோர் | மிட்டாய் |
| வேடிக்கை | பலூன்கள் | வாங்குவோம் |

**கேள்விகள்:**

1. முத்து, சுந்தரத்தை எங்கே சந்தித்தான் ?
2. அவனிடம் எவற்றைக் காணலாம் என்று கூறினான் ?
3. அவர்கள் திருவிழாவில் எவற்றைப் பார்த்தார்கள் ?
4. இராட்டினத்தில் தொங்கிக் கொண்டிருந்தவை எவை ?
5. அவர்கள் கடைசியாக எதைப் பார்த்தார்கள் ?

**பயிற்சி :**

1. ஏராளமாக, பற்பல, கூட்டமாக—இவற்றை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.
2. அளி, அழி—இவற்றின் அர்த்தத்தை எழுது.

3. செல்கின்றனர், வருவார்கள், ஏறுகின்றேன்—இவை காட்டும் காலங்களைக் குறிப்பிடு.

4. கோடிட்ட இடத்தில் ஏற்ற வினைச்சொல்லை அமைத்து வாக்கியத்தை முடி :—
நேற்று நீ வந்தாய். (வா)
நேற்று நீ —— (ஓடு)
நான் இன்று —— (எழுது)
அவன் நாளை —— (போ)

5. தொட்டில்கள், குதிரைகள், சிங்கங்கள், புலிகள் முதலியன தொங்குகின்றன.

இங்கு, குதிரைகள், சிங்கங்கள், புலிகள், தொட்டில்கள் என்ற பெயர்கள் வரிசையாக அடுக்கிக் கூறப்படுகின்றன. ஆதலால், அவற்றைப் பிரிக்க ஓர் அடையாளம் இடப்பட்டிருக்கின்றது. இது காற்புள்ளி எனப்படும்.

அடுக்கி வரும் பெயர்களில் ஒவ்வொன்றின் பின்னும், இரண்டிரண்டாகச் சேர்த்துக் கூறப்படும் பெயர்களுக்குப் பின்னும், எச்சமாக வரும் வினைச்சொற்களின் பின்னும், ஒருவனை விளிக்கும் அல்லது அழைக்கும் பெயர்களுக்குப் பின்னும் காற்புள்ளி இடவேண்டும்.

கல்வி, செல்வம், வாணிபம், கைத்தொழில்கள் நாட்டில் பெருக வேண்டும்—அடுக்கி வந்த பெயர்களின் பின் காற்புள்ளி இடப்பட்டது.

பெரியவர்களும் சிறியவர்களும், ஏழைகளும் பணக்காரர்களும், ஆண்களும் பெண்களும் திருவிழாவுக்கு வந்தார்கள்—இரண்டிரண்டாகச் சேர்த்துக் கூறப்படும் பெயர்களுக்குப் பின் காற்புள்ளி இடப்பட்டது.

இப்பாடத்தில் காற்புள்ளி வந்த இடங்களைக் கவனித்து, அவை எவ்விடத்தில் வந்தன என்பதைக் கூறு.

# 15. இராணி மங்கம்மாள்

1. தமிழ் நாட்டுச் சாலேகளின் இருபுறங்களிலும் உயர்ந்த மரங்கள் காணப்படுகின்றன. முற்காலத்தில் மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு நடந்து சென்ருர்கள். சிலர் மாட்டு வண்டிகளில் சென்றனர். மோட்டார்கள், புகை வண்டித் தொடர்கள், ஆகாய விமானங்கள் அக்காலத்தில் இல்லே. இதனுல், நிழல் தரும் மரங்களேச் சாலேகளில் நட்டு வளர்த்து வந்தார்கள். வெயிலில் நடந்து செல்பவர்களுக்கு அவை குளிர்ந்த நிழலேக் கொடுத்தன. இவ்விதமான மரங்கள் அமைந்த சாலேகளே மதுரையின் பல பாகங்களிலும் அமைத்தவள் இராணி மங்கம்மாள்.

2. இராணி மங்கம்மாள், நாயக்கர் வமிசத்தைச் சேர்ந்தவள். தன் பெயரனுக்குப் பதிலாக மங்கம்மாள் நாட்டை ஆண்டு வந்தாள்.

3. இராணி மங்கம்மாள் திறமையும் புத்திக் கூர்மையும் வாய்ந்தவள். அவளது ஆட்சியில் நாடு செழித்தது ; சண்டை சச்சரவுகள் ஏற்படவில்லே. அரசி கிணறுகளும், குளங்களும் வெட்டுவித்தாள் ; சத்திரம் சாவடிகள் கட்டுவித்தாள் ; சாலேகளே அமைப்பித்தாள் ; இவ்வாறு குடிகளுக்குப் பல வழிகளி-

லும் உதவி செய்தாள். அதனுல், குடிகள் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

4. திருவிதாங்கூர் அரசர் மதுரை மன்னர்களுக்குக் கீழ்ப்பட்டுக் கப்பங் கட்டி வந்தார். அவர் சில ஆண்டுகள் திறை செலுத்தாததனுல், இராணி மங்கம்மாள் ஒரு சேனையை அனுப்பி, அவரைத் தண்டித்து வரச் செய்தாள். அவள் படைக்குத் தலைமை வகித்துச் சென்றவர் **நரசப்ப ஐயர்** என்பவர். அவர் திருவிதாங்கூர் மன்னரை வென்ற பின், தஞ்சாவூருக்குச் சென்ருர். தஞ்சாவூர் அரசர் அவருடன் சமாதானம் செய்துகொண்டார். அச்சமயத்தில் தஞ்சாவூரில் பாயும் காவிரி நதியில் தண்ணீர் வாராதபடி, மைசூர் அரசர் காவிரியின் குறுக்கே பெரிய அணையொன்றைக் கட்டினுர். அதனுல், அவருடன் தஞ்சாவூர் அரசர் இராணி மங்கம்மாளின் உதவிகொண்டு சண்டை செய்ய எண்ணினுர். பெரிய வெள்ளம் வந்து அந்த அணைக்கட்டை அழித்துவிட்டதனுல், சண்டை நடக்கவில்லை.

5. இராமநாதபுரத்து அரசரின் படையுடன் இராணி மங்கம்மாளின் சேனை போர் செய்தது. நரசப்ப ஐயர் அச்சண்டையில் இறந்தார். மங்கம்மாள் படை தோல்வியடைந்தது. தன் பெயரனுக்கு வயது வந்துவிட்ட-

படியால், இராணி நாட்டை அவனிடம் ஒப்பு-வித்துவிட்டாள்.

6. பின்னும் அவள் மதுரையிலேயே வாழ்ந்து, ஏழைகளுக்குப் பல நன்மைகளைச் செய்து வந்தாள். அவள் கட்டிய சத்திரங்-களும், அமைத்த சாலைகளும் இன்றும் இருக்-கின்றன. அவள் பெயர் இன்றும் அழியாது நிற்கின்றது.

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| சுயஆட்சி | வமிசம் | தோல்வி |
| புத்திக்கூர்மை | பெயரன் | திறமை |
| கப்பம் | செழித்தது | தண்டித்து |
| அணை | திறை | ஒப்புவித்து |

**கேள்விகள் :**

1. முற்காலத்தில் மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு எவ்வாறு சென்றார்கள் ?

2. அதனால் எவ்விதமான சாலைகள் அமைக்கப்-பட்டன ?

3. இராணி மங்கம்மாள் காலத்தில் குடிகள் சுக-மாய் வாழ்ந்ததற்குக் காரணம் என்ன ?

4. மங்கம்மாள் திருவிதாங்கூர் மன்னருடன் ஏன் போர் செய்தனள் ?

5. மைசூர் அரசருடன் சண்டையிட எண்ணியவர் யார் ?

6. நரசப்ப ஐயர் எப்போது இறந்தார் ?

7. மங்கம்மாள் பெயர் அழியாதிருக்கக் காரணம் என்ன ?

**பயிற்சி :**

1. எதிர்ச்சொற்கள் எழுது :—

உயர்ந்த, குளிர்ந்த, சண்டை, தோல்வி.

2. ஒரே அர்த்தமுள்ள சொற்களை இணைத்தெழுது :—
சேனை, கப்பம், படை, திறை.

3. வாக்கியங்களில் வேண்டும் இடத்திற் காற்புள்ளியோ, முற்றுப்புள்ளியோ, கேள்விக்குறியோ இடு :—

மக்கள் நடந்தே சென்றனர் மோட்டார்கள் புகை வண்டித் தொடர்கள் ஆகாய விமானங்கள் என்பன அக்காலத்தில் இல்லை சுந்தரம் கடைகளைப் போய்ப் பார்ப்போம் வருகிறாயா

## இலக்கணம் :

அவன் புத்தகத்தை எடுத்தான்—'எடுத்தான்' என்னும் வினைச்சொல் பொருள் முடிந்து நிற்கின்றது. இவ்வாறு பொருள் முடிந்ததைக் காட்டும் வினைச்சொல், **வினைமுற்று** எனப்படும்.

அவன் புத்தகத்தை எடுத்து—'எடுத்து' என்னும் வினைச்சொல் பொருள் முடியாமல் நிற்கின்றது; மற்றொரு சொல்லைக்கொண்டே பொருள் முடிவைப் பெறும். எடுத்துப் **படித்தான்**' என்று வினைமுற்றைக்கொண்டு முடிவதால், இது '**வினை எச்சம்**' எனப்படும்.

'அவன் புத்தகத்தை எடுத்த' என்பதில் 'எடுத்த' என்னும் வினைச்சொல்லும் பொருள் முடியாது நிற்கின்றது. ஆனால், இந்த எச்சவினை, 'எடுத்த சமயம்' என்று பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவதால், **பெயரெச்சம்** எனப்படும்.

ஆகவே, வினைச்சொல் பொருள் முடிந்து நிற்கும் **வினைமுற்று**, பொருள் முடியாது மற்றொரு வினைச்சொல்லைக்கொண்டு முடியும் **வினையெச்சம்**, பொருள் முடியாது பெயரைக்கொண்டு முடியும் **பெயரெச்சம்** என மூன்று வகைப்படும்.

கோடிட்ட இடங்களில் தகுந்த எச்சங்களை அமைத்து எழுது :—

1. சீக்கிரம் தயிர் —— வெண்ணெய் எடு.
2. அவன் மரத்திலிருந்து —— முடவனானான்.
3. கோபத்தை —— மனிதன் வீரனாவான்.



## 16. சர்க்கரை

1. இனிப்பான பண்டங்களை யாவரும் தின்ன விரும்புகின்றனர். சிறுவர் மிட்டாய்க் கடைகளைக் கண்டால் மகிழ்ச்சி கொள்வர். பெரியவர்களும் இனிப்பான பொருள்களை விருப்பத்துடன் உண்பார்கள். பொருள்க-ளுக்கு இனிப்பு எப்படி உண்டாகிறது ?

2. பொங்கல் பண்டிகையின் போது கடைகளில் கரும்புகளைக் கட்டுக்கட்டாக வைத்திருப்பர். அவற்றைத் துண்டு துண்-டாக வெட்டித் தின்பதில் சிறுவர்களுக்குப் பிரியம் அதிகம். கரும்பு இனிப்பாய் இருப்பதே அதற்குக் காரணம். நம் நாட்டில் கரும்பி-

லிருந்துதான் சர்க்கரை செய்கின்றனர். சில தேசங்களில் 'பீட்ரூட்டு' என்னும் கிழங்கிலிருந்தும் சர்க்கரை செய்கின்றனர்.

3. சர்க்கரை எப்படிச் செய்யப்படுகிறது தெரியுமா? கரும்பைக் கணுக்கணுவாக வெட்டிப் பூமியில் நடுவார்கள். சில நாட்களில் அக்கணுக்களிலிருந்து தளிர்கள் தோன்றி, நாணற்புல்லைப் போன்ற நீளமான சோலையாக வளரும். கரும்பு வளரும்போதே பக்கங்களில், வாழையின் பக்கத்தில் கன்றுகள் கிளைப்பது போல, வேறு கரும்புகள் கிளைக்கும். இதனால், ஒரு தடவை ஓரிடத்தில் கரும்பு நட்டால், பல வருடங்கள் வரை அவ்விடத்தில் வேறு கரும்புகளை நடுவதில்லை. ஆனால், பக்கங்களிற் கிளைக்கும் கரும்புகள் வருடத்துக்கு வருடம் சத்துக் குறைந்துகொண்டே வரும். சில வருடங்கள் கழிந்த பின் அவற்றை அழித்துவிட்டு, வேறு கரும்புகளை நடவேண்டும்.

4. கரும்பு வளர்ந்து முற்றிய பின், அதைப் பிடுங்கித் துண்டு துண்டாக வெட்டி, அத்துண்டுகளைக் கரும்பாலைகளிலுள்ள பெரிய உருளைகளுக்கிடையிலே செலுத்துவார்கள். உருளைகள் சுழல்வதால், கரும்புகள் நசுக்கப்பட்டு, அவற்றின் சாறு உருளைகளின் கீழ் வைக்கப்பட்டுள்ள பெரிய பாத்திரங்களில் விழும். அந்தச் சாற்றைப் பெரிய பாத்திரங்-

களில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். காய்ச்சும் போதே சாற்றுடன் சிறிது சுண்ணும்பு சேர்ப்பார்கள்; சில இடங்களில் எலும்புத்தூளைச் சேர்ப்பதுமுண்டு. இவ்வாறு செய்வதால், சாற்றிலுள்ள அழுக்கு மேலே திரண்டு வரும். அதை நீக்கிவிட்டால், சாறு சுத்தமாகும். சாற்றை நன்ருகக் காய்ச்சியபின் கீழே இறக்கிப் பெரிய தொட்டிகளில் ஊற்றுவார்கள். அது குளிர்ந்ததும் இறுகிக் கட்டியாகும். அதுவே **பழுப்புச் சர்க்கரையாகும்.** பழுப்புச் சர்க்கரையைச் சுத்தஞ்செய்து **வெள்ளைச் சர்க்கரை** செய்வார்கள்.

5. சர்க்கரையைச் சேர்ப்பதால் பொருள்களுக்கு இனிப்பு உண்டாகிறது. சர்க்கரை நமது ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.

சொற்கள் :

| | | |
|---|---|---|
| இனிப்பான | பொங்கல் | அதிகரிக்க |
| குழம்பு | பண்டிகை | இயற்கை |
| பீட்டு ரூட்டு | கணு | வெட்டி |
| கரும்பாலை | உருளை | கிளைக்கும் |
| நசுக்கப்பட்டு | சாறு | செலுத்து |
| ஊற்றி | சுண்ணும்பு | காய்ச்சு |
| தொட்டி | திரண்டு | எலும்புத்தூள் |
| ஜீரணசக்தி | பழுப்பு | அழுக்கு |

### கேள்விகள் :

1. இனிப்பு எந்தெந்தப் பொருள்களில் இருக்கின்றது ?

2. இனிப்பில்லாத பொருள்களுக்கு இனிப்பைக் கொடுப்பது எது ?

3. கரும்பு எவ்வாறு பயிரிடப்படுகின்றது ?

4. கரும்பிலிருந்து சாறு எவ்வாறு எடுக்கப்படுகிறது ?

5. கருப்பஞ்சாற்றிலிருந்து சர்க்கரை செய்யப்படுவது எப்படி ?

### பயிற்சி :

1. வாழைக்கன்று—இது போன்று, 'கன்று' என்று வழங்கப்படும் சில பொருள்களின் பெயரை எழுது.
2. பிழைகளைத் திருத்து :—
   (1) கம்பர் நூல் எழுதினான்.
   (2) நான் நேற்றுப் பள்ளிக்கூடம் செல்வேன்.
   (3) அவன் நாளை வந்தேன்.
   (4) நீ இன்று வருகிறேன்.
3. ஔவையார், "அறஞ்செய விரும்பு," என்று கூறினார்.

ஔவையார் கூறியதை நாம் மேற்கொண்டு கூறுவதனால், அவர் சொன்ன வார்த்தைகளுக்கு முன்னும் பின்னும் மேற்கோள் குறிகள் இடவேண்டும்.

பின் வரும் வாக்கியங்களில் வேண்டுமிடங்களில், கேள்விக் குறி, காற்புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள் குறி இடு :—

1. தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு முதலிய மொழிகள் நம் தமிழ் மொழியிலிருந்து பிரிந்தன.
2. போப்பையர் தமிழ்மொழி தொன்மையுடையது நலம் வாய்ந்தது இதைப்போன்ற திராவிடமொழி வேறெதுவும் இல்லை என்று கூறியிருக்கின்றார்.
3. புறு அரசு மற்றப் புறுக்களிடம் இக்காட்டில் தானியம் எப்படி வந்தது இதில் ஏதோ சூது இருக்கின்றது என்று கூறினது.



## 17. பருத்தி

1. மக்கள், அறிவு வளர வளர, புதிய புதிய ஆடைகளை நெய்கின்றார்கள். மக்கள் முதல் முதல் இலைகளையும் பட்டைகளையும் ஆடையாக உடுத்தார்கள்; பின்பு மிருகங்களின் தோலை உரித்து உடுத்தார்கள். இக்காலத்தில் ஆட்டின் மயிரைக் கத்தரித்து, அதனால் கம்பள ஆடை நெய்கின்றார்கள்; பட்டுப்புழுவை வளர்த்துப் பட்டு நூலை உண்டாக்கிப் பட்டாடை நெய்கிறார்கள்; பருத்தியை வளர்த்துப் பஞ்செடுத்து, நூலாக்கி, ஆடை நெய்கின்றார்கள்; இதுவே பருத்தியாடை எனப்படும். உஷ்ண தேசங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பருத்தியாடையே சிறந்தது.

2. பருத்தியாடை பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூலினால் நெய்யப்படுகின்றது. ஆத-

லால், இப்பருத்தியைப் பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். பருத்திச் செடியில் பல விதமுண்டு. நமது தென்னுட்டில் மிகுதியாகப் பயிர் செய்யப்படுவது, **கம்போடியாப் பருத்தி. 'உப்பன் பருத்தி'** என்பது கடற்கரையை அடுத்த பிரதேசங்களில் பயிர் செய்யப்படுகின்றது. கம்போடியாப் பருத்தி மற்றதைவிட நீளமாகவும் பலமுடையதாகவுமிருக்கும். அதன் விலையும் அதிகம்.

3. பருத்தி கரிசல் நிலத்தில் நன்ருக வளரும். செம்மண் பூமியும் பருத்திச் சாகுபடி செய்ய ஏற்றதே. சென்னை மாகாணத்தில் **திருநெல்வேலி, கடப்பை, கர்நூல், பல்லாரி** என்னும் இடங்களில் பருத்தி அதிகமாகப் பயிர் செய்யப்படுகின்றது.

4. பருத்திச் செடியை உற்பத்தி செய்ய முதலில் நிலத்தை ஆழமாக உழுது, புழுதியாக்கி, வெயிலில் நன்ருக உலரும்படி செய்ய வேண்டும். மண்ணுங்கட்டிகளை உடைத்து, நிலத்தைப் புல் பூண்டுகளில்லாமல் சுத்தமாக்க வேண்டும். மழை பெய்ததும் மறுபடியும் உழவேண்டும். பின்பு பருத்தி விதைகளை மாட்டுச் சாணத்துடன் கலந்து விதைக்க வேண்டும். விதைகள் நாலைந்து தினங்களில் முளைக்கும். ஆடு மாடுகள் அவற்றை

அழித்துவிடாதபடி கவனமாகப் பாதுகாத்து வரவேண்டும். பருத்திச் செடிகள் பசுமையாய் வளரும். ஆடி ஆவணி மாதங்களே பருத்தியைப் பயிர் செய்யத் தகுந்த காலம்.

5. செடிகளில் மஞ்சள் நிறமான பூக்கள் தோன்றும். செடியின் ஒவ்வொரு கணுவிலும் ஒவ்வொரு பூவைக் காணலாம். பூக்களில் காய்கள் தோன்றும். அவை பசுமை நிறமாயிருக்கும். அவை முற்றி, சூரியனது வெப்பத்தால் வெடிக்கும் போது பஞ்சு வெளிப்படும்.

6. பஞ்சு வெடித்ததும், குடியானவர்கள் அதை எடுத்துக் கூடைகளில் நிரப்புவார்கள். பஞ்சை நன்ருக வெயிலிற்காயவைத்து, அரைமணையில் கொடுத்து அரைத்தால், கொட்டை வேறு, பஞ்சுவேருகப்பிரியும். பஞ்சைத்தக்கிளியினுல் நூலாக நூற்கலாம். வில்லாலடித்துப் பஞ்சை மென்மையாகச் செய்து திரித்து, இராட்டையில் கொடுத்தும் நூல் நூற்கலாம். நூற்கும் பொழுது பஞ்சு குழைந்து, முறுக்கேறி நூலாகும்.

7. பஞ்சு நூலைக்கொண்டு துணியை நெய்யலாம். துணி நெய்யும் கருவி, ‘ தறி ’ எனப்படும். நூலைப் பசை இட்டுப் பாவு நூலாக்குவர் ; இப்பாவு நூலைத் தறியில் சேர்ப்பர் ; பின்பு குறுக்கே வேறு இழைகளைச் சேர்ப்-

பர். குறுக்கே இழைகளைச் சேர்ப்பதைத்தான் நாம் 'நெசவு' என்று வழங்குகின்றோம். இம்-



முறையே 'கைத்தறி நெசவு' என வழங்கப்-படும். இக்காலத்தில் பெரிய இயந்திரங்களி-லும் நூல் நூற்றலும், நெய்தலும் நடைபெறு-கின்றன.

8. முன் காலத்தில் நமது நாட்டில் நூல்



நூற்றலும், நெசவுத் தொழிலும் மிகுதியாய் நடைபெற்றன. நம் முன்னோர் அழகான

ஆடைகளை நெய்து, பிற நாடுகளுக்கு அனுப்பினர். இக்காலத்தில் இத்தொழில் நன்கு நடைபெறவில்லை. அதனால், நாட்டு மக்கள் வறுமையினால் துன்பமடைகின்றார்கள். இதை உணர்ந்த நம் நாட்டுப் பெரியாராகிய **காந்தி அடிகள்**, நெசவுத் தொழிலின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தினர். '**அகில பாரத சர்க்கா சங்கம்**' ஏற்படுத்தப்பட்டு, நூல் நூற்றலும், நெய்தலும் புதுப்பிக்கப்பட்டன. இதனால், மறைந்த பருத்தித் தொழில் சிறிது சிறிதாக விருத்தியடைந்து வருகிறது. இப்பொழுது பள்ளிக்கூடங்களிலும் நூல் நூற்றல் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகின்றது.

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| உரித்து | கம்பளி | பருத்தி |
| கம்போடியா | கரிசல் | பட்டுப் புழு |
| பஞ்சு | உப்பன் பருத்தி | பட்டாடை |
| சாகுபடி | கத்தரித்து | இராட்டை |
| ஏற்றது | மணை | புதுப்பிக்கப்பட்டன |
| இழை | புழுதி | தக்கிளி |
| அரைத்தால் | குழைந்து | தறி |
| புல் பூண்டு | வெடித்து | நூற்றல் |

**கேள்விகள் :**

1. மனிதர் முன் காலத்தில் எவ்வித ஆடைகளை அணிந்தனர் ?

2. இக்காலத்தில் ஆடைகள் எவற்ருல் நெய்யப்படுகின்றன ?

3. நமது நாட்டில் பயிரிடப்படும் பருத்தியின் வகை எவை ?

4. நம் நாட்டில் பருத்தி பயிர் செய்யப்படும் இடங்கள் எவை ?

5. பஞ்சு எவ்வாறு நூலாகின்றது ?

6. துணி எவ்வாறு நெய்யப்படுகின்றது ?

7. நம் நாட்டில் நெசவுத் தொழில் வளரக் காரணமாயிருந்தவர் யார் ?

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—
   புதிய, முன்னோர், துன்பம்.
2. துண்டு துண்டாக, கட்டுக் கட்டாக, சிறிது சிறிதாக. இவற்றை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.
3. இழை, முளை — இவற்றிற்கு இரு பொருள்கள் எழுது.
4. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை செயப்படு பொருள்களைக் குறிப்பிடு :—
   அவர்கள் மிட்டாய் வாங்கினர்கள்.
   நாம் நீர்மோர் குடிப்போம்.
5. பிரித்தெழுது :—
   பட்டாடை, பஞ்செடுத்து, பலமுடையது.



## 18. காந்தியடிகள்

1. நமது நாடு இப்பொழுது சுதந்தர நாடு. சில ஆண்டுகளுக்கு முன் இது ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நம் நாடு சுய ஆட்சி அடைவதற்குப் பல பெரியார் பெரிதும் உழைத்தனர். அவர்களுள் சிறந்தவர் **காந்தியடிகள்.** இவரை **மகாத்துமா காந்தி** என்றே மக்கள் வழங்குவார்கள்.

2. காந்தியடிகள் வடவிந்தியாவிலே, **போர் பந்தர்** என்னும் ஊரிலே, 1869-ஆம்

வருடம் பிறந்தார். இவர் ராஜக் கோட்டை என்னும் ஊரில் கல்வி பயின்ருர் ; பாவா நகரத்தில் தமது கல்லூரிப் படிப்பை முடித்த பின், இங்கிலாந்துக்குச் சட்டக் கல்வி பயிலச் சென்ருர்.

3. இவருடைய பெற்ருேர்கள், நேர்மை-யும், ஒழுக்கமும், தெய்வபத்தியுமுள்ளவர்கள். அவர்கள் தங்கள் குமாரருக்கு எப்போதும் உண்மையே பேச வேண்டுமெனக் கூறி வந்-தார்கள். இவர் அப்படியே நடந்து உயர்வை அடைந்தார்.

4. இவர் இந்தியாவிற்குத் திரும்பி, வழக்-கறிஞராய்த் தொழில் செய்து வந்தார். ஆனல், அத்தொழிலால் பெரும்பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று இவர் விரும்பவில்லை ; மற்ற-வர்களுக்கு உதவி செய்யவே விரும்பினர். மகம்மதிய வியாபாரி ஒருவர், தம் வழக்கை நடத்தும்படி இவரை ஆப்பிரிக்காவுக்கு அனுப்-பினர். ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர் அனு-பவித்த துன்பத்தை இவர் கண்டார் ; அத்துன்-பத்தை நீக்கத் தம்மாலியன்ற அளவு முயற்சி செய்தார். அங்குள்ள அரசாங்கத்தாரை எதிர்த்து, அஹிம்ஸைப் போர் முறையைக் கையாண்டார். சாந்தத்தை மேற்கொண்டு,

பொது நலச் சேவை புரிவதே இப்போர் முறை-யாகும். இதனுல், அந்நாட்டு இந்தியருடைய நிலைமை சிறிது உயர்ந்தது.

5. இவர் செய்த பொதுத் தொண்டினுல், இவர் பெயர் உலகமெங்கும் பரவியது. இந்தியா-வுக்குத் திரும்பிய இவர், காங்கிரஸ் மகாசபை-யில் சேர்ந்து, நாட்டின் விடுதலைக்காக உழைத்-தார் ; பாமர மக்களின் எளிய நிலையைக் கண்டு அவர்களது வறுமையைப் போக்கக் குடிசைக் கைத்தொழில்களைப் புதுப்பித்தார் ; தீண்டாமையை ஒழிக்க மக்களுக்குப் புத்திமதி கூறினுர் ; சத்தியாக்கிரக ஆச்சிரமம் ஏற்படுத்-தினுர். மக்கள் இவருடைய போதனையை ஏற்று, நாட்டு விடுதலைக்காக உழைத்தார்கள்.

6. 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு, மாதம், பதினைந்தாம் நாள் நம் நாட்டிற்கு விடுதலை கிடைத்தது. அந்த நாளைத்தான் நாம் ‘ சுதந்-தரத் திருநாள் ’ எனக் கொண்டாடுகிறோம். காந்தியடிகள், நாடு விடுதலை பெற்ற பின், இந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமையாய் வாழவேண்டும் என விரும்பினுர். இந்து மதத்-தைச் சேர்ந்த ஒருவன், இவர் மகம்மதியர்மீது அன்பு செலுத்துகின்றுர் என்று நினைத்து, அந்தோ ! 1948-ஆம் ஆண்டு, ஜனுவரி மாதம்,

முப்பதாம் நாள் இவரைத் துப்பாக்கியினுல் சுட்டுக் கொன்ருன் !

7. இவர் இறந்த செய்தியறிந்து, உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது! இவர் இறந்த போதிலும், இவரை மக்கள் அன்புடன் நினைத்து, நாட்டின் தந்தையார் எனப் போற்றி வருகின்ருர்கள்.

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| சுதந்தரம் | ஆங்கிலேயர் | கல்லூரி |
| போர் பந்தர் | ராஜக்கோட்டை | ஒழுக்கம் |
| தெய்வபக்தி | நேர்மை | வழக்கு |
| இயன்ற அளவு | வழக்கறிஞர் | பொதுத் தொண்டு |
| விடுதலை | தீண்டாமை | போதனை |
| துக்கம் | ஆழ்ந்தனர் | துப்பாக்கி |

**கேள்விகள் :**

1. நம் நாடு சுதந்தரம் பெற்ற நாள் எது ?
2. சுதந்தரத்துக்காக உழைத்தவர்களுள் சிறந்தவர் யார் ?
3. காந்தியடிகள் கல்வி கற்றது எங்கே ?
4. அவர் பெற்ருேர்கள் எப்படிப்பட்டவர்கள் ?
5. காந்தியடிகளின் பெயர் உலகில் பரவக் காரணம் என்ன ?
6. நம் நாடு விடுதலையடைந்த பின் காந்தியடிகள் எதை விரும்பினுர் ?
7. இவரைக் கொலை செய்தவன் யார் ?
8. இவர் எவ்வாறு போற்றப்படுகின்ருர் ?

பயிற்சி :

1. பிரித்தெழுது :—
வாக்குறுதி, வழக்கறிஞர்.

2. எதிர்ச்சொல் எழுது :—
விரும்பினார், இறந்தார்.

3. கீழ் வரும் எச்சங்களை ஏற்ற சொற்களால் முடித்துக் காட்டு :—

சொல்லைக்காத்து ——
உதவி செய்ய ——
அனுபவித்து ——
சேர்ந்து ——
சேர்ந்த ——
இறந்த ——

4. 'அந்தோ !' என்னும் சொல் உணர்ச்சியைக் காட்டுகிறது. அதனால், அதன் பின் இடப்பட்டுள்ள குறி 'உணர்ச்சிக்குறி' அல்லது 'வியப்புக்குறி' எனப்படும்.

ஐயோ ! பொருளை இழந்தேனே !—இது துக்கத்தைக் காட்டுகின்றது.

ஆகா ! இது எவ்வளவு அழகான குதிரை !—இது வியப்பைக் காட்டுகிறது.

சீ சீ ! பேதையே !—இது வெறுப்பைக் காட்டுகிறது.

துக்கம், வியப்பு, வெறுப்பு முதலிய உணர்ச்சிகளைக் காட்டும் சொற்கள் இடைச்சொற்கள்.

# செய்யுட்பகுதி

## 1. நாட்டுச் சேவை

என்றும் தமிழ்மக்கள் யாவரும் ஒத்திணங்கி,
ஒன்றித்து நின்ருல் உயர்வுண்டாம் ; அன்றெனில்,
மானம்போம் ; செல்வம்போம் ; மானிடவாழ் விற்குரிய
தானம்போம் ; யாவும்போம் தாழ்ந்து. 1

பண்டைத் தமிழர் பழம்பெருமை பாடி இன்னும்
மண்டை யுடைத்து வருந்துவதேன் ? அண்டுமிக்
காலத்திற் கேற்றகல்வி கற்றுக் கடைப்பிடித்து,
ஞாலத்தில் வாழ்ந்திடுவோம் நன்கு. 2

வாணிகம் செய்வோம் ; வயலில் பயிர்செய்வோம் ;
காணரிய கைத்தொழிலும் கண்டுசெய்வோம்—பேணிநம்
சந்தத் தமிழ்வளர்ப்போம் ; தாய்நாட்டுக் கேஉழைப்போம்
சிந்தை மகிழ்ந்து தினம். 3

குறிப்பு :

இப்பாடலைப் பாடிய ஆசிரியர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், திருவிதாங்கூர் நாட்டிலுள்ள புத்தேரியில் வாழ்ந்து வருகின்றனர். இவர் சிறந்த கவிஞர் ; ஆராய்ச்சியாளர் ; இக்காலத் தமிழ்ப் புலவர்களிற் சிறந்தவர்.

சொற்பொருள் விளக்கம் :

1. என்றும் - எக்காலத்தும், ஒத்து இணங்கி - மிகுந்த ஒற்றுமையாய், ஒன்றித்து - சேர்ந்து, தானம் - நிலைமை, இடம்.

2. அண்டும் - பொருந்தும், கடைப்பிடித்து - பின் பற்றி, ஞாலம் - உலகம்.

3. காணுதற்கு அரிய - பிறரால் செய்து காண்பதற்கு இயலாத, கண்டு - கண்டுபிடித்து, பேணி - பாதுகாத்து, சந்தம் - அழகு.

### கேள்விகள் :

1. நாம் எப்பொழுது உயர்வு பெறுவோம் ?

2. மக்கள் ஒற்றுமைக்குறைவால் எவற்றை இழப்பார்கள் ?

3. தமிழ் மக்கள் எதை நினைத்து வருந்துகின்றூர்கள் ?

4. நாம் ஞாலத்தில் எவ்வாறு வாழ்தல் வேண்டும் ?

5. நாம் தாய் நாட்டுக்காக எவற்றைச் செய்து உழைக்கவேண்டும் ?

### பயிற்சி :

1. பிரித்தெழுதுக :—ஒத்திணங்கி, உயர்வுண்டாம், வாழ்விற்குரிய, காலத்திற்கேற்ற, பழம்பெருமை, காணரிய.
2. மூன்ருவது செய்யுளிலுள்ள வினை முற்றுக்களை எடுத்தெழுது.

## 2. முதலியார் வாங்கிய காளை

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளை தினம் இருபோர் தின்னும்;
சட்டமுடன் கொள்உண்ணும்; புல்லுண்ணும்;
அதைப்பண்டி தன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும்; தொட்டவர்மே
லேசாயும், கீழே வீழும்;
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்தி ராதே.

### குறிப்பு :

இப்பாடலைப் பாடியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. இவர் முனிசீப்பு உத்தியோகம் செய்தவர்; ஓய்வு நேரத்தில் பல செய்யுட்களை இயற்றியிருக்கின்றார். இவர் கிறிஸ்தவர்; ஆயினும், எல்லா மதங்களையும் பாராட்டுபவர்.

### சொற்பொருள் விளக்கம் :

இட்டமுடன் - விருப்பத்துடன், போர் - வைக்கோற் போர், பண்டி - வண்டி, கிட்ட - சமீபத்தில்.

### கேள்விகள் :

1. முதலியார் வாங்கிய மாடு எவற்றைத் தின்னும்?
2. வண்டியிற் பூட்டச் சென்றால், அது என்ன செய்யும் ?

### பயிற்சி :

1. முதலியார் வாங்கிய காளையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
2. எட்டாள்கள் - இச்சொற்றொடரைப் பிரித்தெழுது.
3. இச்செய்யுளிலுள்ள வினை முற்றுக்களை எடுத்தெழுது.

## 3. மூதுரை

### பெரியோர் தன்மை

அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 1

### நல்லோர் சேர்க்கை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொற் கேட்ப துவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 2

### தீயோர் சேர்க்கை

தீயாரைக் காண்பதுவும் தீதே ; திருவற்ற
தீயார்சொற் கேட்ப துவும்தீதே ;—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே ; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது. 3

### உருவம் கண்டு இகழாமை

மடல்பெரிது தாழை ; மகிழ்இனிது கந்தம் ;
உடல்சிறியர் என்றிருக்கவேண்டா ;-கடல்பெரிது ;
மண்ணீரும் ஆகா(து) ; அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 4

### அடக்கம் உள்ளவர் பெருமை

அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 5

### அறிவில்லாதவன் சிறுமை

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ;—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ருன் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். 6

### கல்லாதவன் செய்யுள் உரைத்தல்

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினுற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 7

### இனம் இனத்தோடு சேர்தல்

நற்ரு மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போற்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர் ;—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் ; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 8

### கற்ருேர் சிறப்பு

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்;--மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை ; கற்ருேற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு. 9

### அற்பருக்குச் செய்யும் உதவி

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனுற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 10

குறிப்பு :

இச் செய்யுட்களை இயற்றிய புலவர் ஔவையார். இவரை அறியாதார் தமிழ் உலகில் இல்லை. இவர் சிறு-வர்களுக்காகப் பாடிய பாடல்களில் மூதுரையும் ஒன்று. அது வாக்குண்டாம் எனவும் வழங்கப்படும்.

சொற்பொருள் விளக்கம் :

1. அட்டாலும் - காய்ச்சினாலும், அளவளாய் - கலந்து பேசி, நட்டாலும் - சினேகித்தாலும், கெட்டாலும் - வறுமை அடைந்தாலும், சுட்டாலும் - நெருப்பில் இட்டுச் சுடினும்.

2. நல்லார் - நற்குணமுடையவர், நலம் - நன்மை, இணங்கி - சேர்ந்து.

3. தீயார் - கெட்ட குணமுடையவர், திரு - நற்குண நற்செயல்கள்.

4. தாழை - தாழம்பூ, மடல் - இதழ், மகிழ் - மகிழம் பூ, கந்தம் - வாசனை, மண் நீரும் - கழுவுதற்குத் தக்க நீரும், சிற்றூறல் - சிறிய ஊற்று நீர். மண்ணீர் - மண் + நீர், உண்ணீர் - உண் + நீர், சிற்றூறல் - சிறுமை + ஊறல்.

5. அடக்கம் - அடங்கியிருக்குந் தன்மை, கடக்க - வெல்ல, ஓடுமீன் - ஓடும் சிறிய மீன்கள், மடைத்தலை - நீர் பாயும் மடைப்பக்கம், உறு - பெரிய.

வலிமையறியாது அடக்கமுடையவரை வெல்லக் கருதின், கேடு வரும்.

6. கவை - கிளை, காட்டகம் - (காடு + அகம்) காட்டினுள், நீட்டோலை - (நீட்டு + ஓலை) நீட்டிய கடிதம், குறிப்பு - சைகை.

கல்லாதவன் - பிறர் குறிப்பு அறியாதவன் - மனிதன் அல்லன் ; அவன் மரமேயாவன்.

7. கானமயில் - காட்டிலுள்ள மயில், பொல்லா - அழகில்லாத, கற்ற கவி - கற்றுச் சொல்லிய பாட்டு, கற்ற

வரைப்போலத் தன்னைக் கருதி, அவர் தொழிலைத் தான் மேற்கொள்ளினும், கல்லாதான் கல்லாதவனேயாவான்.

8. கயத்தின் - குளத்திலுள்ள, நற்றாமரை - (நல்+தாமரை) அழகிய தாமரைப்பூவை, காமுறுவர் -(காமம்+உறுவர்) விரும்பிச்சேர்வர், முதுகாடு - சுடுகாடு, உகக்கும் - விரும்பும், கற்பு - கல்வி, முகப்பர் - விரும்புவர்.

கற்றவரோடு கற்றவரும், மூடரோடு மூடரும் சேர்வர்.

9. மாசு - குற்றம், சீர் தூக்கல் - அளந்து பார்த்தல், மன்னற்கு - (மன்னன்+கு) அரசனுக்கு, சிறப்பு - மேன்மை, ஒருவற்கு - (ஒருவர்+கு) ஒரு மனிதனுக்கு.

அரசனிலும் கற்றவனே சிறப்புடையவன்.

10. வரி வேங்கை - கோடுகளையுடைய வேங்கைப் புலி, விடகாரி - விஷவைத்தியன், பாங்கு - தன்மை (அழியுந்தன்மை), புல்லறிவாளர் - அற்பமான அறிவுடையவர், இட்ட - போட்ட.

மூடருக்கு உதவி செய்பவன் தானே அழிவான்.

**கேள்விகள் :**

1. மேன்மக்களுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பொருள்கள் யாவை ?

2. நாம் யாருடன் இணங்கி வாழ வேண்டும் ?

3. நாம் யாருடன் இணங்குதல் கூடாது ?

4. கடல் நீர், ஊற்று நீர்—இவை எதனை விளக்க வந்தன ?

5. அடக்கமுடையார் தன்மை எப்படிப்பட்டது ?

6. கொக்கின் தன்மை என்ன ?

7. மனிதர்களுள் மரம் போன்றவன் யார் ?

8. வான்கோழி யாருக்குச் சமமாகக் கூறப்படுகிறது ?

9. கற்றவன் அரசனைவிட எதனால் சிறப்புடையவன் ?

10. தன் நோயைத் தீர்த்த வைத்தியனைப் புலி என்ன செய்தது ?

11. மூடருக்கு உபகாரம் செய்தால் என்ன நேரிடும் ?

பயிற்சி :

பிரித்தெழுது :—

நண்பல்லர் = நண்பு + அல்லர்
ஆகாதளவளாய் =
என்றிருக்க =
குறிப்பறிய =
கற்பில்லா =
அதனுக்காகாரம் =

147170